உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-140

விருப்ப சந்தா இதழ்

ஜூன் 16-30, 2022



## திருச்சியில் ஒரு சீரடி

## முல்லை நிலத்திற்குரிய தமிழ்க்கடவுள் பெருமாள்

# சிலை திருடர்களை மிரளவைத்த அம்மன்

# பக்தி என்பது உண்மையை பார்க்காது
# நம்பிக்கையை மட்டுமே பார்க்கும்

பக்திக்கு தேவை நம்பிக்கை தான்! கண்ணனிடம் அர்ஜுனின் அசைக்க முடியாத நம்பிக்கை

கண்ணபிரானும், அர்ஜுனனும் சென்று கொண்டிருந்தபோது, மேலே பறந்த பறவையை அது புறா தானே, என்றார் கண்ணன்.

அர்ஜுனனும் ஆம் என்றான். இல்லை யில்லை....கழுகு மாதிரி தெரிகிறது, என்றார் கண்ணன்.

ரொம்ப சரி...அது கழுகே தான், என்றான் அர்ஜுனன்.

மைத்துனா! சரியாகப் பார், அது கிளி மாதிரி பச்சையாக இல்லை... என்றதும், அதிலென்ன சந்தேகம், அது கிளி தான், கிளி தான், கிளிதான் என்றுமூன்று முறை அடித்துச் சொன்னான் அர்ஜுனன்.

என்னடா நீ!நான் என்ன சொன்னாலும், ஆமாம் சாமி போடுகிறாயே...!அது என்ன பறவை என தெளிவாகச் சொல், என்ற கண்ணனிடம்,

கண்ணா! என்பார்வையை விட உன்வார்த்தையில் எனக்கு நம்பிக்கை அதிகம்.

மேலும், அந்தப்பறவையை நான் புறா என்று அடித்துச் சொன்னால், அதை கிளியாகவோ, கழுகாகவோ மாற்றிவிட, உனக்கு எவ்வளவு நேரமாகி விடும்!

நீயே எல்லாம் என்றானபிறகு, எந்தப் பொருளும் எப்படிவேண்டுமானாலும் மாறுமே...! உன் சக்தியை மட்டுமே நான் நம்புகிறேன், என்றான்.

பக்திக்கு தேவை நம்பிக்கை தான்!




# ஸ்ரீவைகுண்டமும் வேண்டாம், இந்திரலோகமும் வேண்டாம்
# ஸ்ரீரங்கம் ரங்கநாதன் மட்டுமே போதும்




ஆழ்வார்களில் தொண்டரடிப்பொடியாழ்வார் ரங்கநாதர் மீது காதல் கொண்டவர். தான் பாடிய `பச்சைமால் மலைபோல் மேனி' என்ற பாடலில் `இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே' என்று பாடியுள்ளார்.

இதன் விளக்கம் ரங்கநாதரை தரிசிக்கும் பாக்கியத்திற்கு பதில் இந்திரலோகத்தை தன்னிடம் ஒப்படைத்து ஆள சொல்லினாலும் அது தனக்கு வேண்டாம் என்கிறார்.

இதுபோல ஸ்ரீ ரங்கத்தில் வசித்தவர் `சொட்டை நம்பி' இவர் தனது சீடர்களிடம், "நான் வைகுண்டம் நிச்சயம் போவேன் அங்கு பெருமாளை தரிசனம் செய்வேன், அவர் மட்டும் நம் ஊரில் உள்ள ரங்கநாதரைப் போல இல்லா விட்டால் வைகுண்டமே வேண்டாமென்று வந்துவிடுவேன்'' என்று ரங்கநாதரின் மீதுள்ள காதலால் கூறியுள்ளார்.

# பூசலார் மனதில் கட்டிய கோவில்

# இருதயப் பிரச்சனைகளை தீர்க்கும் அற்புத ஸ்தலம்




தொண்டை நாட்டில் திருநின்றவூரிலே மறையவர் குலத்திலே தோன்றியவர் பூசலார். உடல் முழுவதும் திருநீறைத் தொடர்ந்து பூசி வந்ததால் பூசலார் என்று ஊர் மக்கள் அன்புடன் அழைத்து வந்தனர்.

மிகச் சிறந்த சிவனடியாராகிய பூசலார், சிவனடியார்களுக்கு ஏற்றபணி செய்தலே பிறவிப்பயன் எனக் கொண்டு பொருள்தேடி அடியார்க்கு அளித்து வந்தார். சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்துப் பணிசெய்ய விரும்பினார். ஆனால் தம்மிடத்தில் பொருள் இல்லாமையால் அதற்குரிய பொருளை வருந்தித் தேடியும் பெற இயலவில்லை, இந்நிலையில் மனத்திலே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைக்க எண்ணினார்.

மனத்தின்கண் சிறிதுசிறிதாகப் பெரும்பொருள் சேர்த்தார். திருப்பணிக்கு வேண்டிய கல் மரம் முதலிய சாதனங்களையும் பணிசெய்தற்குரிய தச்சர் முதலிய பணியாளர்களையும் மனத்தில் தேடிக்கொண்டார்.

நல்ல நாள் பார்த்துத் திருக்கோயிற் பணியைத் தம் மனத்துள்ளே தொடங்கி இரவும் துயிலாமல் அடிப்படை முதல் உபானம் முதலிய வரிசைகளை அமைத்து உரிய அளவுப்படி






விமானமும் சிகரமும் அமைத்து அதன்மேல் தூபியும் நட்டனர்.

சுதைவேலை முடித்து அக்கோயிலினுள்ளே கிணறு திருக்குளம், மதில் முதலான எல்லாம் வகுத்தமைத்து இவ்வாறு தம் மனத்தில் உருவாகிய திருக்கோயிலுள்ளே சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற்கேற்ற நல்லநாளும் (கும்பாபிஷேகம்) வேளையும் நிச்சயித்தார்.

பூசலார் கும்பாபிஷேகம் செய்ய நினைத்த நாளிலேயே, காஞ்சிபுரத்தில் அரசாட்சி செய்து வந்த பல்லவர்கோன் என்ற மன்னன் (இவர் வடமொழியில் சிம்ஹாங்க, பாதசிம்ஹா, பஞ்சபாதசிம்ஹா என்று அழைக்கப்பட்டார்.) தான் கட்டிய மிகப்பெரிய கோவிலுக்கு கும்பாபிஷேக தேதியை நிர்ணயித்தார்.

இவரது கனவில் தோன்றிய இறைவன், மன்னன் எழுப்பிய கோவிலுக்கான கும்பாபிஷேக தேதியை மாற்றியமைக்கவேண்டினார், மேலும், அதே நாளில் பூசலார் தன் மனதால் அமைத்த கோவிலின் கும்பாபிஷேகத்தில் தான் கலந்து கொள்ளவிருப்பதால், மன்னன் கட்டிய கோவில் கும்பாபிஷேகத்திற்கு தன்னால் வரமுடியாது என்ற செய்தியையும் கனவில் உணர்த்தினார் சிவபெருமான்.

கண்விழித்து பார்த்த மன்னன் அதிர்ச்சி அடைந்து, பூசலார் அமைத்த கோவிலைத் தேடி திருநின்றவூர் சென்று, பூசலார் கட்டிய கோவி லைப் பற்றி விசாரிக்க தொடங்கினார்.

ஆனால் பூசலார் கோவில் ஏதும் கட்டவில்லை என்று ஊர்மக்கள் கூறியதை கேட்டு அதிசயித்த மன்னர், பூசலாரை நேரில் கண்டு, இறைவன் தன் கனவில் வந்து தாங்கள் கட்டும் கோவில் கும்பாபிஷேக தேதியில் கலந்து கொள்ள விருப்பதாக தெரிவித்தாரே என்று கேட்டார்.

அதற்கு பூசலார், தான் கோவில் ஏதும் கட்ட வில்லை, அந்த அளவற்கு எண்ணிடம் பொருள் இல்லை, அதனால் இறைவனுக்கு மனதால் ஒரு கோவிலை கட்டிக்கொண்டிருப்பதாக கூறியதை கேட்டு, அரசன் பூசலார் காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றான்.

பூசலார் இதயத்தில் எழுப்பிய அதே கோயிலை நிலவுலகில் பல்லவ மன்னன் நிர்மாணித்தான்.

இருதயாலீஸ்வரர் திருக்கோயில் சென்னையிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் திருநின்றவூரில் அமைந்துள்ளது. பூசலாரின் இதயத்தில் எழுந்தருளிய காரணத்தால் சிவனுக்கு இருதயாலீஸ்வரன் என்று பெயர். அம்பாள் திருநாமம் மரகதாம்பிகை. இத்திருக்கோவில் இருதயநோய் உள்ளவர்களுக்குப் பரிகாரத் தலமாக விளங்குகிறது.


கீதா-ராஜன்

சிவன் இருதயாலீஸ்வராக எழுந்தருளியிருக்கும் கருவறையின் மேற்கூரையில் நான்கு பிரிவு களுடன் இதய வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

இதய நோயால் துன்புற்றிருப்பவர்கள் இவ்விறை வனை மன முருக வேண்டிப் பிரார்த்தனை செலுத்தினால் அந்நோய்களிலிருந்து விடுபடுகிறார்கள் என்பது ஐதீகம்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# இருபதாண்டுகால இழப்பு அல்ல இருபதாயிரம் ஆண்டு கால

# ஞானத்தின் இழப்பு

கிறிஸ்தவ மத போதகர்கள் முதன்முதலாக இந்தியாவிற்கு வந்த போது அவர்களில் சிலர் திலகம் அணிய ஆரம்பித்தார்கள். இதன் காரண மாக போப் ஆண்டவரின் வாட்டிகன் நாட்டில் விவகாரம் ஏற்பட்டு மதபோதகர்களை விளக்கம் கேட்டு எழுதியிருந்தார்கள்.

சிலர் திலகம் அனிந்துக் கொண்டார்கள். சிலர் மரக்கட்டை செருப்பும் அணிந்துக் கொண்டார்கள். சிலர் பூணூலும், காவியாடையும் தரிந்து இந்துமத சன்னியாசிகள் போல் வாழ்ந்தார்கள்.

அவர்கள் தவறு செய்வதாக வாடிகன் தலைமை பீடம் கருதியது.

ஆனால் மதபோதகர்கள் அதற்கு விளக்கம் அளித்து எழுதினார்கள்.

"அவ்வாறு வாழ்வதால் அவர்கள் இந்துக்கள் ஆகிவிடவில்லை என்றும் திலகம் அணிவதால் அவர்கள் ஒரு ரகசியத்தை அறிந்து கொண்டதாக வும், மரக்கட்டை செருப்பு அணிவதால் தியானம் வெகுவிரைவில் கை கூடுவதாகவும், தியான சக்தி வீணாவதில்லை என்றும் பதில் எழுதினார்கள்!! மேலும், இந்தியர்கள் சில ரகசியங்களை அறிந்திருக்கிறார்கள்...... அவற்றைக் கிறிஸ்துவ மத போதகர்கள் அறியாதிருப்பது மடத்தனம் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்".

இந்துக்களுக்கு நிச்சயமாக பல ஆழமான விஷயங்கள் தெரிந்திருந்திருந்தன.

இல்லாவிட்டால் 20,000 ஆண்டு களாக சமயத்தேடுதல் இருந் திருக்க முடியாது. உண்மை தேடும் முயற்சியில்தான் அறிவுலக மேதைகள் 20,000 ஆண்டுகளாகத் தம் வாழ்வை அர்ப்பணித்து வந்துள்ளனர்.

அவர்களுக்கு இருந்தது ஒரே ஒரு ஆசைதான். "இந்த வாழ்வுக்குப் பின் னால் மறைந்திருக்கும் பரபிரம்ம உண்மை யை அறியவேண்டும். வடிவமற்ற அதை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும்"!!

20,000 ஆண்டுகளாக இந்த ஒரு தேடலுக்காக ஒரே மனதுடன் தம் அறிவையெல்லாம் பயன் படுத்தி வந்த அவர்களுக்கு எதுவும் தெரியாது என்பது வியப்பான கருத்து அல்லவா? அவர்களுக்கு உண்மை தெரியும் என்பதும் அதில் அவர்கள் வேள்வி, தவம், தியானம், நிஷ்டை போன்ற ஞானத் தேடல்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்கள் என்பதும் இயல்பான உண்மை.

ஆனால், 20,000 ஆண்டுகாலத்தில் இடையூறு விளைவிக்கும் சில நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நிகழ்ந்துள்ளன.

இந்த இந்து தேசத்தின் மீதும் இந்துக்கள் மீதும் நூற்றுக்கணக்கான அந்நியப் படையெடுப் புகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் எந்த படையெடுப் பாளராலும் முக்கியமான மையத்தை தாக்க முடியவில்லை!!

சிலர் செல்வத்தைத் கொள்ளையடித்தார்கள். சிலர் நிலங்களை ஆக்கிரமித்தார்கள். சிலர், அரண்மனைகளையும் கோட்டை கொத்தளங் களையும், பெண்களையும் கைப்பற்றினார்கள். பலர் குறிப்பாக இந்துக்களின் வழிபாட்டுத் தளங்களில் இருந்த அரிய கலை பொக்கிஷங்கள், ஐம்பொன் சிலைகள், தங்க ஆபரணங்களை கவர்ந்து சென்றனர்.

ஆனால்இந்து தேசத்தின் உள்ளார்ந்த அம்சத் தைத் தாக்கயாரா லும் முடியவில் லை! கி.பி.1000 முதல்1700வரை நிகழ்ந்த படை பலமும், முரட் டுத்தனமும் வாய்ந்த இஸ்லாமியப் படையெடுப் பாலும் எதுவும் செய்ய முடியவில்லை!!

ஆனால் முதன்



**இந்து தேசத்தின் மீதும் இந்துக்கள் மீதும் நூற்றுக்கணக்கான அந்நியப் படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. செல்வம், பெண்கள், நிலங்கள், அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள் போன்றவற்றை கொள்ளையடித்தவர்களால் வழிபாட்டுத் தளங்களில் இருந்த அரிய கலை பொக்கிஷங்கள், ஐம்பொன் சிலைகள், தங்க ஆபரணங்களை மட்டுமே கொள்ளையடிக்க முடிந்தது ஆனால் இந்து தேசத்தின் உள்ளார்ந்த அம்சத்தைத் தாக்க யாராலும் முடியவில்லை!**

முதலாக மேலைநாட்டு (கிறிஸ்தவ) நாகரீகத்தால்தான் அந்தத் தாக்குதல் ஏற்பட்டது. அவ்வகைத் தாக்குதல் நடத்துவதற்கான எளிய வழி, "ஒரு நாட்டின் வரலாற்றை அந்த நாட்டின் இளைய சமுதாயத்திடமிருந்து பிரித்து வைப்பதுதான்".

(மெக்காலே கல்வித் திட்டம் அதைத் தான் செய்தது.இன்றும் அதைத்தான் செய்து வருகிறது. இந்த கொடூரத்தினை உணரும் அரசியல்வாதிகள் ஆளும் கட்சியாவதில்லை.) அது இந்து தேசத்தின் செழிப்பான, பரந்துவிரிந்த மனித மாண்பினை விவரிக்கும், சுயச்சார்பினை உரத்துக்கூறும் வரலாற்றை அழிப்பதற்காக செய்யப்படுவது.

நாட்டின் மக்களுக்கும் அதன் வரலாற்றிற்கும் இடையில் ஓர் இடைவெளி உண்டாக்கப்பட்டது. இதனால், இந்துக்களாகிய நாம் நம்முடைய வேர்களை இழந்தோம். சக்தியிழந்தோம்.

ஒரு இருபது ஆண்டுக் காலத்திற்கு பெரியவர்கள் தம் குழந்தைகளுக்கு எதுவுமே கற்றுத் தருவதில்லை என்று முடிவெடுத்தால் என்ன ஆகும்? என கற்பனை செய்து பாருங்கள். அதனால் ஏற்படும் விளைவு இருபதாண்டுகால இழப்பு அல்ல இருபதாயிரம் ஆண்டு கால ஞானத்தின் இழப்பு ஆகும். அந்த இழப்பை சரி செய்வதற்கு இருபதாண்டு காலம் போதாது. 20,000 ஆண்டுக்காலம் தேவைப்படும்.

காரணம் அறிவு சேகரிப்பின் தொடர்பு அறுபட்டுப் போவதுதான். இரண்டு நூற்றாண்டு கால கிறிஸ்தவ இங்கிலாந்து ஆட்சியென்ற பெயரில் சுரண்டிய சுரண்டலும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த அறிவு சேகரிப்பு இடைவெளி இந்த 20,000 ஆண்டு இடைவெளிக்கு சமமாகும்!!

முந்தைய ஞானத்திற்கும், நமக்குமான தொடர்பு கிறிஸ்தவத்தால் அறுக்கப்பட்டது. கடந்த காலத்தோடு எந்த தொடர்புமற்ற முற்றிலும் புதிதான ஒரு நாகரிகம் நிலை நிறுத்தப்பட்டது.

நமது இந்து நாகரிகம் மிகப் புராதனமானது என்று இந்துக்கள் நம்புகிறார்கள்.

ஆனால், அவர்கள் நினைப்பது தவறு, இது வெறும் 20,000 ஆண்டுகால பழமையான சமுதாயம் மட்டுமே என வெள்ளைத் தோலைக்கொண்ட இங்கிலாந்து நரிகள் ஊளையிட்டன.

அந்த ஊளைக்கூச்சல் நமக்கு நமது பாரதப் பண்பாட்டின் மீதே சந்தேகம் கொள்ள வைத்து, மேல்நாட்டு நாகரிகத்தின் மீது மரியாதையை கொண்டு வந்துவிட்டது.

இதனால், 20,000 ஆண்டுகளுக்கு முன்பு நாம் பெற்றிருந்த ஞான செல்வங்களையெல்லாம் கடந்த வெறும் 200 வருடங்களில் ஒரே வீச்சில் இந்துதேசம் இழந்துவிட்டது.

200 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் தடைபட்டு நின்றுபோன நமது இந்துதர்ம அறிவுடன் தொடர்புக் கொள்ள முடியாமல்தான், இன்று ஆன்மீகக் கல்வியறிவு இல்லாத மக்கள் அற்பத்தனமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்தக்கால இந்து நாகரீகத்தை மீட்டெடுப்பதன் மூலம் நாம் மீண்டும் அவற்றிற்கு புத்துயிர் தந்து, ஆழமாக புரிந்துக்கொண்டு 20,000 ஆண்டுக்கால அறிவோடு தொடர்புக் கொள்ள முடியும்.

அப்போதுதான் இதுவரை நாம் செய்துவந்த மேல்நாட்டு நாகரீகப் பயன்பாடு (ஆங்கிலத்தில் பேசுவதை பெருமையாக நினைப்பது, வீட்டுக்குள்ளேயே செருப்பு போட்டு நடப்பது, கோயில்கள், ஜோதிடம், பண்பாடு, சமயப் பெரியவர்களை கேலி செய்வது) எவ்வளவு பெரிய தற்கொலை என்பது விளங்கும்.

– ஓஷோ
மறைந்திருக்கும் உண்மைகள்
பக்கங்கள் 128,129,130,131.

# பாவம் புண்ணியம் யாருக்கு சொந்தம்?

1. பாவத்தை விரும்பி செய்பவன் அதன் தண்டனையை அவன் விரும்பாவிட்டாலும் அனுபவித்து முடிக்க நேரிடும்.
2. பாவம் முதலில் கண்களின் மூலம் உருவாகின்றது கண்கள் சுத்தமானால் அனைத்தும் சுத்தமாகும்.
3. மனதினுடைய சிந்தனைகள் பாவத்தை படம் பிடிக்கின்றது.அந்த பாவத்தை செய்வதற்கு புத்தி தீர்மானிக்கின்றது. பிறகு செயல்கள் மூலமாக பாவம் வெளிப்படுகின்றது.
4. பாவம் கண்களின் மூலமாக சஞ்சலத்தை உண்டு பண்ணும் பொழுதே பார்வையை நேர்மையானதாக மாற்ற முயல வேண்டும். அது மேலும் பாவ சிந்தனையை உருவாகா மல் தடுத்துவிடும்.
5. பாவம் தன் மூலமாகவும் உருவாகிடக்கூடாது பிறர் மூலமாகவும் உருவாக்கப்பட கூடாது. இதற்காக சுய சோதனை செய்யவேண்டும் எங்கிருந்துபாவம் உருவாகின்றது என்பதை உற்று நோக்கி கவனித்து விலக்கவேண்டும்.
6. தனது செயல்களை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் இன்று நான் செய்த செயல்கள் சரியானதாக இருந்ததா? எவ்விதத்திலும் தவறு ஏற்படவில்லையே? பிறருக்கு துக் கத்தை கொடுத்ததா? எவ்விதத்திலும் பிற ருக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியதா? என்பதை சுய சோதனை செய்து சுயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.
7. யாருடனும் பாவத் திற்கு உடன் படக் கூடாது. யாரையும் பாவம் செய்வதற்கு உடன்படுத்த கூடாது. ஏனென் றால் பாவம் என்பது உயிருடன் எரியும் பிணக்கிடங்கில் தள்ளுவதை போலஆகும். அந்தவேதனையின் குரல் யாருக்கும் கேட்காது.

   எனவே பாவம் செய்வதற்கு ஒருவர் பயந்துநடக்க வேண்டும்.
8. ஒரு பக்கம் பாவம் செய்து கொண்டே இன்னொரு பக்கம் புண்ணியமும் செய் தால் ஒருநாள் சேர்த்து வைத்த பாவம் அனைத்தும் செய்த புண்ணியத்தையும் சேர்த்து அழித்து விடும்.எனவே பாவ புண்ணிய கணக்கை இரவில் பரிசோதித்து விட்டு உறங்கச் செல்ல வேண்டும்.
9. ஒருவர் புண்ணியம் செய்யும் பொழுது அவர் மனதின் நிலை கவனிக்கப்படுகின்றது.அந்த மனதின் நிலையை பொறுத்தே புண்ணிய பலன்கள் கணக்கிடப்படுகின்றன .
10. நீ எந்த அளவு பிறர் உனக்கு செய்த துரோகத்தையும் பாவத்தையும் மன்னித்து விடுகின்றாயோ, அந்த அளவு உனது பாவங்களும் துரோகங்களும் தந்தை ஈச னிடத்தில் மன்னிக்கப்படுகின்றன.
11. உன்னை சார்ந்தவர்களுக்கும் உன் குடும் பத்திற்கும் நீ செய்வது உதவி. உன்னை யாரென்றே தெரியாத ஒருவருக்கு நீ செய் யும் உதவி தான் புண்ணியம்.
12. இறைவன் தனக்கு செய்யும் அபிஷேகத்தை விட இயலாதவர்களுக்கு செய்யும் உதவியை மட்டுமே பெரிதும் விரும்புகின்றார்.எனவே, தன்னால் முயன்ற உதவிகளை பிறருக்கு செய்து பார்.இறை வனுடைய மனமும் குளிரும் உனது புண்ணியக் கணக்கும் நிறையும். உன்னை துன்புறுத் தும் பிரச்சனைகள் யாவும் அகன்று வாழ்வில் ஒளி பிறக்கும்.

எனவே, நாம் செய்வது நமக்கே என்றுணர்ந்து வாழும் வரை வாழ்வில் ஒருவர் சத்தியத்தை கடைபிடித்து இவ்வுலகிலிருந்து முக்திய டைய வேண்டும்...





www.aanmeegamalar.com

# தேய்பிறை அஷ்டமியில் நாய்க்கான உணவால் தீர்க்கப்படும் பாவங்கள்

பைரவர் என்றாலே பயத்தை நீக்குபவர், மக்களின் பாவத்தை நீக்குபவர் என்று பொருள். தேய்பிறை அஷ்டமி வழிபாடு ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறையில் அஷ்டமி திதி அன்று பைரவ வழிபாடு செய்ய உகந்தது ஆகும்.

அந்நாள் பைரவாஷ்டமி என்று வழங்கப்படுகிறது. அதிலும் தேய்பிறை அஷ்டமி கால பைரவாஷ்டமி என்று வழங்கப்பட்டு சிறப்பு பெறுகிறது.

வளர்ந்துகொண்டே செல்லும் நிலா மீண்டும் தேய ஆரம்பிக்கும் பொழுது இந்த பிரபஞ்சத்தில் ஒரு விதமான மாற்றம் நிகழ்கிறது. இம்மாற்றத் தின் இறுதியாக அமாவாசை தோன்றும் பொழுது பிரபஞ்சத்தில் அதீதமான சக்தி நிலவும். இந்த சக்தியை நல்ல விசயத்திற்கும் பயன்படுத்துவார்கள், அமானுஷ்ய விஷயத்திற்கும் பயன்படுத்திக் கொள்வது உண்டு.

அத்தகைய சக்தி வாய்ந்த தேய்பிறை நாட்கள் ரொம்பவே விசேஷமானது. அதிலும் தேய்பிறை அஷ்டமி திதியானது பைரவருக்கு ரொம்பவே உகந்ததாக இருக்கிறது.

தேய்பிறை அஷ்டமியில் பைரவரை வழிபடுவர்களுக்கு கடன் எல்லாம் தீரும், பகை எல்லாம் ஒழியும் என்பது நம்பிக்கையாக இருந்துவருகிறது.

அவருடைய வாகனமாக இருக்கக்கூடிய நாய்களுக்கு அன்றைய நாளில் நாம் இந்த தானங்களை வழங்குவதால் நமக்கு செய்த பாவங்கள் பாதியாய் குறையும் என்கிற நம்பிக்கையும் உண்டு.

தேய்பிறை அஷ்டமியில் பைரவருக்கு மிளகு தீபம் ஏற்றி வழிபட்டால் எவ்வளவு பெரிய கடன் தொகையில் சிக்கி இருந்தாலும் அதிலிருந்து உடனடியாக மீண்டு விடுவார்கள் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்து வருகிறது.

அது மட்டுமல்லாமல் தொழில் மற்றும் வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டாலும், பைரவரை மனதார வழிபட்டு செவ்வரளி மலர் சாற்றினால் இழந்த செல்வாக்கை மீண்டும் அடைவார்கள் என்பது நம்பிக்கை.

அது போல பகைவர்கள் தொல்லைகளால் அவதிப்படுபவர்களும் பைரவர் சன்னிதிக்குச் சென்று அவருக்கு அபிஷேகம் செய்து அவருடைய விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டாலே போதும், பகைவர்கள் உங்களை நெருங்க கூட மாட்டார்கள். பைரவர் உடைய விபூதியை வியாழன் கிழமை அன்று கோவிலுக்கு சென்று எடுத்து வந்து வீட்டில் பூஜை அறையில் வைத்துக் கொண்டால் வீட்டில் இருக்க கூடிய



www.aanmeegamalar.com

துர்சக்திகள் அனைத்தும் தலைதெறிக்க ஓடி விடும். எவ்வளவு கஷ்டங்கள் வீட்டில் இருந் தாலும் அவை ஒழிந்து சுபீட்சம் பெருகும் என்ற நம்பிக்கையும் உண்டு.

பைரவருக்கு அத்தகைய சக்திகள் உண்டு. அது போல பைரவரின் வாகனமாக இருக் கக்கூடிய நாய்களுக்கு உணவாக நாம் எதைக் கொடுத்தாலும் அது புண்ணியக் கணக்கில் சேரும்.

அதுவும் தேய்பிறை அஷ்டமியில் நாய்களுக்கு தானம் கொடுப்பது ரொம்பவே சிறந்த பரிகாரமாக இருந்து வருகிறது. அப்படி இருக்கும் பொழுது நாய்களுக்கு சப்பாத்தி கொடுப்பது என்பது இன்னும் அதிகமான பலன்களைக் கொடுக்கக் கூடிய ஒரு தானமாக இருந்து வருகிறது. வட மாநிலங்களில் அதிகம் தயாரிக்கப்படும் இந்த சப்பாத்தியை பைரவரின் வாகனமாக இருக்கும் நாய்களுக்கு தேய்பிறை அஷ்டமியில் தானம் செய்வது என்பது ரொம்பவே விசேஷமானது.

சப்பாத்தி மட்டுமல்ல கோதுமையால் செய்யப் பட்ட எந்த உணவையும் நாய்களுக்கு தானம் கொடுப்பது என்பது பாவங்களைப் போக்கக் கூடிய சூட்சுமமான பரிகாரமாக இருந்து வரு கிறது. மேலும் அது மட்டுமல்லாமல் பிஸ்கட் போன்ற மைதாவில் செய்யப்பட்ட உணவு வகைகளையும் நாம் அன்றைய தினத்தில் நாய்களுக்கு தானம் செய்தால் நம்முடைய பாவங்கள் பாதியாய் குறைந்து நம்முடைய பிரச்சனைகளும் குறைய ஆரம்பிக்கும்.

மேலும் அஷ்டமி திதியில் பஞ்ச எண்ணெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும். ஐந்து தனித்தனி அகல் எடுத்துக் கொண்டு ஒரு அகலில் நல்லெண்ணெய். இன்னொரு அகலில் இலுப்ப எண்ணெய். மற்றொன்றில் விளக்கு எண்ணெய். அடுத்ததில் பசு நெய். அடுத்த அகலில் தேங் காய் எண்ணெய் ஊற்றி பைரவரை நோக்கி அக லின் திரி முகம் வைத்து தனித்தனியாக ஏற்ற வேண்டும்.

ஒரு அகலில் ஏற்றிய நெருப்பில் இருந்து இன்னொரு தீபம் ஏற்றக்கூடாது, (ஒவ்வொரு எண்ணெய் கொண்டு எரியும் தீபத்தின் சக்தி வெவ்வேறாகும், ஒன்று இன்னுமொன்றோடு சேரக்கூடாது சக்தி மோதல் உண்டாகும்) இவ்வாறு தனித்தனியாக ஏற்றி வழிபட்டால் தீராத பிரச்சனையும் தீரும். காலத்தினால்தீர்க்க முடியாத தொல் லைகள் நீங்கும். நல் லருள் கிட்டும்.




# அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

**SML Graphics**
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203



பாண்டுகேஷ்வர் ஆலயம்



கௌரிகுண்ட்

www.aanmeegamalar.com

# கேதார்நாத் கோயில் உருவான விதம்

மகாபாரதப் போரில் தங்கள் உறவினர்களையே கொன்றதால் ஏற்பட்ட பாவத்தை போக்கிக் கொள்ள பாண்டவர்கள் காசிக்கு புனித யாத்திரை மேற்கொண்டனர்.

ஆனால் சிவபெருமான் கயிலாயம் சென்றிருப்பதை அறிந்த பாண்டவர்கள், காசியிலிருந்து கயிலாயம் நோக்கி பிரயாணம் செய்யத் தொடங்கினர்.

ஹரித்வார் வழியாக இமயத்தை அடைந்தபோது தொலைவில் சிவபெருமானை கண்டனர்.

ஆனால் சிவபெருமான் அங்கிருந்து மறைந்து விட்டார்.

அந்த இடம் தற்போது குப்தகாசி என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

சிவபெருமானைத் தரிசிக்காமல் திரும்புவதில்லை என்ற உறுதியுடன் பாண்டவர்கள் குப்தகாசியில் இருந்து இமாலயப் பள்ளத்தாக்கில் இருக்கும் கௌரிகுண்ட் என்னும் இடத்தை அடைந்தனர்.

அங்கு அவர்கள் சிவபெருமானை தேடி அலைகையில் நகுலனும் சகாதேவனும் ஒரு வித்தியாசமான ஆண் காட்டெருமையைக் கண்டனர்.

பீமன் தனது கதாயுதத்தைக் கொண்டு அக்காட்டெருமையைத் தாக்க முயன்றான்.

ஆனால் அது சாதுரியமாகப் பீமனின் பிடியில் இருந்து தப்பிவிட்டது.

ஆனால் பீமனின் கதாயுதம் அதன் முகத்தில் தாக்கியது.

அக்காட்டெருமை தனது முகத்தை நிலத்தில் இருந்த பிளவு ஒன்றில் மறைத்துக் கொண்டது. பீமன் அதன் வாலை பிடித்து இழுக்க அப்போது நிலத்தில் இருந்த பிளவு நேபாளம் வரை நீண்டது.



கேதார்நாத் கோயில்

www.aanmeegamalar.com



தோலேஷ்வர் மகாதேவ்
நேபாளம்


குப்தகாசி



கேதாரேஷ்வரர்


சுவர்க்கரோகினி

அவ்விடம் தற்போது நேபாளில் தோலேஷ்வர் மகாதேவ் என்று வழங்கப்படுகிறது.

அக்காட்டெருமையின் உடற்பகுதி கேதார் நாத்தில் இருந்தது.

காட்டெருமையின் உடற்பகுதி இருந்த இடத்தில் ஒரு ஜோதிர்லிங்கம் உண்டானது.

அதன் ஒளியில் இருந்து சிவபெருமான் பாண்டவர்களுக்குக் காட்சியளித்து அவர்களின் பாவத்தைப் போக்கினார்.

அந்த முக்கோண வடிவ ஜோதிர்லிங்கம் கேதார்நாத் கோயிலின் கருவறையில் உள்ளது.

கோயிலை சுற்றி பாண்டவர்களின் பல அடையாளங்கள் உள்ளன.

பாண்டுகேஷ்வர் என்னும் இடத்தில் ராஜா பாண்டு உயிர் நீத்தார்.

இங்கிருக்கும் பழங்குடியினர் பாண்டவ நிருத்யம் என்ற நடனத்தை ஆடுகின்றனர்.

பாண்டவர்கள் சுவர்க்கத்திற்கு சென்ற இடமான சுவர்க்கரோகினி என்ற மலையுச்சி பத்ரிநாத்திற்கு சற்று தொலைவில் உள்ளது.

பீமன் காட்டெருமை உருவத்திலிருந்த சிவ பெருமானோடு சண்டையிட்டபோது சண்டையின் முடிவில் காட்சியளித்த சிவபெருமானுக்கு பீமன் நெய்யால் அபிஷேகம் செய்தான்.

அதன் நினைவாக இன்றும் கேதார்நாத்தில் இருக்கும் ஜோதிர்லிங்கத்திற்கு நெய்யால் அபிஷேகம் செய்யப்படுகிறது.

நீரும் வில்வமும் வழிபாட்டிற்கு பயன்படுத்தப் படுகின்றன.

நரநாராயணர் பத்ரிகா என்னும் கிராமத்திற்கு சென்று சிவபெருமானை வழிபட்டனர்.

அவர்களுக்குக் காட்சியளித்த சிவபெருமானிடம், உலக மக்கள் நன்மைக்காக சிவபெருமான் எப்போதும் இங்கு இருந்து அருள வேண்டும் என்று வேண்டினர்.

அவர்கள் வேண்டுதலை ஏற்ற சிவபெருமான் இமயத்தில் கேதார் என்னும் இடத்தில் ஜோதிர் லிங்க வடிவத்தில் திகழ்கிறார்.

அவர் கேதாரேஷ்வரர் என்று போற்றப்படுகிறார்.

கேதார்நாத் கோயில் கங்கையின் கிளை நதிகளுள் ஒன்றான மந்தாகினி ஆற்றங்கரை யோரம் அமைந்துள்ளது.

ரிஷிகேஷில் இருந்து 223 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இக்கோயில் கடல் மட்டத்தில் இருந்து 3,583 மீட்டர் (11,755 அடி) உயரத்தில் உள்ளது. இக்கோயில் எட்டாம் நூற்றாண்டில் ஆதிசங்கரர் இவ்விடத்திற்கு வந்தபோது கட்டப் பட்டதாக அறியப்படுகிறது.

இன்றைய கோயில் பாண்டவர்கள் கோயில் எழுப்பிய இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

இக்கோயில் பனிபடர்ந்த மலைகளும் பனியாறு களும் சூழ்ந்த பீடபூமி மீது அமைந்துள்ளது.

இக்கோயில் ஒரு கல் கோயில் ஆகும். கருவறைக்கு எதிரே நந்தி சிலை உள்ளது.

# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**130** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**






காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலில்


திருவானைக்கா

# உலகை காக்கும் பஞ்சபூதங்களும் பஞ்சபூதஸ்தலங்களும்

ஐந்து என்பது உலகின் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணாக விளங்குகிறது. "நமசிவாய" எனும் ஐந்தெழுத்து பஞ்சாட்சரம் எனவும் பஞ்சாட்சர மந்திரம் எனவும் அழைக்கப்படுகிறது.

இந்த ஐந்து எழுத்துக்களை,

| | |
|---|---|
| தூல பஞ்சாட்சரம் | நமசிவய |
| சூட்சும பஞ்சாட்சரம் | சிவயநம |
| ஆதி பஞ்சாட்சரம் | சிவயசிவ |
| காரண பஞ்சாட்சரம் | சிவசிவ |
| ஏக பஞ்சாட்சரம் | சி |

என 5ஐந்து வடிவங்களாகக் கொள்கின்றனர்.

நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு
ஐந்தும்கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
– என்கிறது தொல்காப்பியம்.

இந்த உலகம் பஞ்சபூதங்களை அடங்கியுள் ளது நீர், காற்று, நெருப்பு ஆகாயம், நிலம் கொண்டது. ஐந்து என்பதுதான் ஒருவித உலக சூட்சமம். நம் உடலின் உள்ள எலும்பு, சதை, ரத்த ஓட்டம், நரம்பு, செயல்பாட்டுக்கு பஞ்ச பூத தத்துவம் உள்ளே வேலை செய்தால்தான் அனைத்து உடல் மூலக்கூறுகளும் சீராக வேலை செய்யும்.

பஞ்சபூத அடிப்படை தத்துவங்களே மனித உடலில் மட்டும் அல்லாது தாவரங்கள், விலங்குகள் மற்றும் அனைத்து பிரபஞ்ச சக்திக்கும் தேவைப்படும் ஒரு மூலக்கூறு இந்த பஞ்சபூதங்கள். இந்த பஞ்ச பூதங்களின் விகிதாசாரம் குறையத் துவங்கினால் பஞ்சம் என்ற நோய் உலகைத் தாக்கும். நம் பஞ்சபூதங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் சிவபெருமான்.

பஞ்சப் பிரம்மமான சதாசிவத்துக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. இந்த ஐந்து முகங்களும் 1.சத்யோஜாத முகம், 2.வாமதேவ முகம், 3.அகோர முகம், 4.தத்புருஷ முகம், 5.ஈசான முகம்.

ஒவ்வொன்றிலிருந்து ஐந்து மூர்த்தங்களாய் உருவெடுத்து மொத்தம் 25 முகங்களுடன் மகா சதாசிவ மூர்த்தி திகழ்கிறார். இந்த பிர பஞ்சத்தை ஐந்து தொழிலாகத் திசைக்கு ஒன்றாகச் செய்துவருகிறார். அவை ஆக்கல், அழித்தல், காத்தல், மறைத்தல், அருளல் என்று அடக்கி ஆட்சிபுரிகிறார்.

இந்த பஞ்ச பூதங்களுக்கு தலைவனாக விளங்கும் சிவபெருமான் பஞ்சபூதஸ்தலங்களில் தனது சக்தியை வெளிப்படுத்திவருவதாகவும் கூறப்படுகிறது.

இதில் இன்னும் சிறப்பு என்னவென்றால் இந்த பஞ்சபூத ஸதலங்களும் தென்னிந்தியாவில் அமைந்திருப்பது சிறப்பு.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய







பஞ்ச பூதங்களுக்கு உரிய சிவாலயங்களில் மூலவராக உள்ள சிவலிங்கங்கள் பஞ்சபூதங்களின் பெயர் களாலேயே அழைக்கப்பெறுகின்றன.

பஞ்ச பூத தலங்களும் சிவனின் பெயர்களும்

| | |
|---|---|
| நிலம் | காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் பிருத்வி லிங்கம் (காஞ்சிபுரம்) |
| நீர் | திருவானைக்காவல் கோவில் (திருச்சி) |
| வாயு | ஸ்ரீ காலஹஸ்தி (காலஹஸ்தி ) |
| ஆகாயம் | சிதம்பரம் நடராசர் கோவில் (சிதம்பரம் ) |
| நெருப்பு | திருவண்ணாமலையார் கோவில் (திருவண்ணாமலை) |

## 1. காஞ்சிபுரம் பிருத்வி லிங்கம்

காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரநாதர் கோயிலில் ஸ்தலவிருட்சம் என போற்றப்படும் மாமரத்தின் வயது 5000 ஆண்டுகள். இந்த மாமரத்தின் கீழ் உமையாள் தவம் செய்ததாகவும், இம்மரத்தில் கனியும் மாங்கனிகள் நான்கு வித சுவையுடையவை என்றும் கூறப்படுகிறது. இங்கு உள்ள சிவபெருமானை பிருத்வி லிங்கம் என்று அழைப்பர். இந்த சிவபெருமான் மண்ணால் ஆனவர். இதனை சுயம்பு என்றும் கூறுவது உண்டு. அதனால் இந்த சிவபெருமானுக்கு அபிஷேகங் கள் நடப்பது கிடையாது. மாற்றாக லிங்க வடிவில் உள்ள ஆவுடையாருக்கு அபிஷேகங்கள் நடைபெறும். மேலும் இங்கு மற்ற கோவில்களைப் போல அம்மனுக்கு என்று தனியாக சந்நிதி கிடையாது.


புனிதவேல்

## 2. திருவானைக்காவல், திருச்சி ஜம்புலிங்கம் நீர்த் தலம்.

காவேரி ஆற்றுக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட தீவுப்பகுதியில், திருவரங்கத்திற்கு அருகே அமைந்துள்ளது. திருவானைக்கா பஞ்சபூத ஸ்தலங்களில் அப்புஸ்தலம் நீர்த்தலம் ஆகும்.

மூலஸ்தான லிங்கம் இருக்குமிடம் தரைமட்டத் திற்குக் கீழே இருப்பதால் எப்போதும் தண்ணீர் கசிவு இருந்துகொண்டே இருக்கும்.

இங்கு இருக்கும் ஜம்பு லிங்கம் அம்பிகையால் செய்யப்பட்டது. ஒரு முறை பூமிக்கு வந்த அம்பிகை சிவனை வழிபட சித்தம் கொண்டார். காவேரியில் சிறிது நீர் எடுத்து லிங்கம் வடித் தார்.

அம்பிகை கையில் நீர் லிங்கமாக மாறியது. அம்பிகை அந்த லிங்கத்தை வழிப்பட்டு ஆனந் தம் அடைந்தார். நீரால் செய்யப்பட்டதால் லிங்கம் ஜம்புலிங்கம் என வழங்கப்படுகிறது.

திருவானைக்கா அன்னை அகிலாண்டேஸ் வரியின் ஆட்சித்தலம்: உச்சிக்கால பூஜையின் போது சிவாச்சாரியார் அன்னை அகிலாண் டேஸ்வரி போல பெண் வேடமிட்டு கிரீடம் அணிந்து கொண்டு மேள வாத்தியங்களோடு யானை முன்னே செல்ல சுவாமி சந்நிதிக்கு வந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்வது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

## 3. ஸ்ரீ காளஹஸ்தி வாயு லிங்கம்

இந்த கோவிலில் ராகு, கேது கிரக தோஷம், சர்ப்ப தோஷ நிவர்த்திக்கான பரிகார பூசைகள் செய்யப்படுவதால் நாடு முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கில் பக்தர்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர்.

சிலந்தி; காளத்தி என்பது காளம்பாம்பு; அத்தியானை சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்றும் இத்தலத்தில் சிவலிங்கத்தைப் பூசித்து முக்தி பெற்றதால் அவற்றின் பெயரால் இவ்வூர் சீகாளத்தி எனப் பெயர் பெற்றது..

## 4. சிதம்பரம் ஆகாச லிங்கம்

சைவர்களின் முக்கிய கடவு ளான சிவ பெருமான், நடராசர் என்ற பெயரில் வீற்றிருக்கும் ஆல யம் இந்த சிதம்பரம் கோவில். இங்கு சிவகாமியம்மையும் அருள் செய்கிறார்.

அதுமட்டுமல்லாது, வைணவர்களின் முக் கிய கடவுளான திருமால், கோவிந்தராசப் பெருமாளாகப் புண்டரீகவல்லித் தாயாருடன் திருச்சித்திரக்கூடத்தில் வீற்றிருக்கிறார்.

மூலவர் சிலை இருக்கும் இடம் கனக சபை என்று அழைக்கப்படுகிறது.

பஞ்சபூதங்களில் ஒன்று எனக்கூறப்படும் ஆகாசம் வடிவில், சிவன் இருக்கிறார் என்பதைக் குறிப்பால் உணர்த்தும் வகையில் சிதம்பர ரகசியம் அமைக்கப்பட்டுள்ளது. இரத் தினத்தால் செய்யப்பட்ட நடராசர் விக்கிரகமும், ஆதிசங்கரர் அளித்த ஸ்படிக லிங்கமும், இன்றும் சிதம்பரம் ஆலயத்தில் பூசித்து வரப்படுகிறது.

## 5. திருவண்ணாமலை அக்னி லிங்கம்

சிவமும் சக்தியும் ஒன்றே என்பதை உணர்த்து வதற்காக அர்த்தநாரீஸ்வரராக வடிவம் எடுத் ததும், சிவராத்திரி விழா உருவானதுமான பெருமையை உடைய தலம்.

சிவன், கார்த்திகை மாத கிருத்திகை நட்சத் திரத்தில், திருமால், பிரம்மன் இருவருக்கும் அக்னி வடிவமாக காட்சி தந்தார். சிவத்தலமான இங்கு ஜோதி ரூபத்தில் பெருமாள் சொர்க்க வாசல் கடக்கிறார்.

வைகுண்ட ஏகாதசியன்று அதிகாலையில் தீபத்தை 'வைகுண்ட வாசல்' வழியே கொண்டு வருவர். பஞ்சபூத தலங்களில் இது அக்னி தலம் என்பதால், பெருமாளும் ஜோதி வடிவில் எழுந்தருளுவதாகச் சொல்கின்றனர். ஆஞ் சநேயருக்கு செந்தூரம் பூசி அலங்கரிப்பது தெரிந்த விஷயம். ஆனால், இத்தலத்திலுள்ள விநாயகருக்கு செந்தூரம் பூசுகிறார்கள்.



அருணகிரியார் முருகனை வேண்டவே, அவர் இங்குள்ள 16 கால் மண்டபத்தின் ஒரு தூணில் காட்சி தந்தார். இதனால், இவர் 'கம்பத்திளையனார்' (கம்பம் தூண், இளையனார்முருகன்) என்று பெயர் பெற்றார்.

பிரம்ம லிங்கம், யோக நந்தி, பாதாள லிங்கம், கிளி கோபுரம், அருணகிரி யோகேசர் ஆகியவை முக்கியமாக தரிசனம் செய்ய வேண்டியவையாகும்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்:
9841807572




திருவண்ணாமலை

## ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப், இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக வெளியிட்டு வருகிறோம்.

**இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.**

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த பொருளாதார உதவி தேவைப்படுகிறது. உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



## ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203 எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# இராசி பலன்

**மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான பலன்கள்**

**அடுத்த 15 நாட்களுக்கு தரப்பட்டுள்ளது**




குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 25–30% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும். ராசி, லக்கினம் இரண்டில் எது வலுவாக உள்ளதோ அதை பொறுத்தே பலன்கள் அமையும். பலன்களை ராசிப்படியும், லக்கினத்தையும் ராசியாக பாவித்தும் ஒப்பிட்டுப்பார்த்து நடைமுறையில் பொருந்தும் பலன்களை அறிந்து கொள்ளவும்.

**(15.6.22 முதல் 30.6.22 வரை)**




ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர், கிருஷ்ணகிரி
கி.கார்த்திகேயன். செல்: 7904761779




**மேஷம்:** ராசிநாதன் செவ்வாய் ராசியில், பஞ்சமாதிபதி சூரியன் 3 இல், தன மற்றும் சப்தமாதிபதி சுக்கிரன் இரண்டில், ராகு, புதனுடன் சேர்க்கை, கர்மாதிபதி சனிபகவான் 11 இல் மற்றும் தன காரகன் குரு ராசிக்கு 12 இல், கேது 8 இல் மறைவு எடுத்த காரியம் சிறப்பாய் முடியும், தொழில், குடும்ப நிலவரம் திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த தன லாபம் கிடைக்கும். நவ நாகரீக பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். அரசு, தந்தை வழியில் உதவி லாபம் உண்டு. அரசு வேலை, அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் விரைந்து வெற்றிகரமாக முடியும். ஜாதகரின் பிள்ளைகளுக்கு எதிர்பார்த்த வேலை கிடைக்கும். திருமணத்தை எதிர்நோக்குபவர்களுக்கு காலம் கூடிவரும். வேலை, தொழில் செய்யும் இடத்தில் நல்ல பெயர், புகழ், பதவி மற்றும் ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு தொழிலாளர்களால் ஆதரவு மற்றும் ஆதாயம் உண்டு. புனித யாத்திரை, இன்சூரன்ஸ் பணம், நீண்டகால டெபாசிட்டுகளில் லாபத்தை எதிர்பார்க்கலாம். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். சிலர் கோயில், குளம் என புனித யாத்திரை சென்று வருவார்கள். பரிகாரம்: விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு, யானை, குரங்கு போன்ற பிராணிகளுக்கு உணவளித்தல்.



**ரிஷபம்:** ராசிநாதன் சுக்கிரன் ராசியில் சஞ்சாரம் செய்கிறார் உடன் ராகு மற்றும் தன, பஞ்சமாதிபதி புதன், இரண்டில் சூரியன் பத்தில் தர்ம கர்மாதிபதி சனி பகவான், 10 இல் அஷ்டம மற்றும் லாபாதிபதி குரு, 11 இல் 7 மற்றும் 12 குடைய செவ்வாய் 11 இல், 6 இல் கேது மனதில் தெளிவு, உற்சாகமாக காணப்படுவீர்கள். அரசு, அரசு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் ஆதாயம் பெறுவர். தந்தை வழி உறவுகளால் இலாபம். பேச்சில் நிதானம் கவனம் தேவை. சகோதர உறவுகளிடையே பிணக்குகள் உருவாகலாம். பணி அல்லது அலுவல் காரணமாக தற்காலிகமாக குடும்பத்தை பிரிந்து இருக்கும் நிலை சிலருக்கு உண்டாகும். மனைவி வகையில் மருத்துவ செலவுகள் சிலருக்கு ஏற்படும் தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலை சீராக இருக்கும். தாயார் உடல் நிலையில் கவனம் தேவை. பூமி, நிலம் சேர்க்கை சிலருக்கு உண்டாகும். சிறு பயணங்கள் உண்டாகும். பயணங்களின் போது சிறுது கவனம் தேவை. 23, 24 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 26, 27 தேதிகள் புதிய முயற்சிகளில் சிறப்பான பலன்களை தரும். குழந்தைகளால் சில சங்கடங்கள், கவலைகள் வந்து போகும். பரிகாரம்: சுப்பிரமணியர், ஆஞ்சநேயர்

வழிபாடு. சிறு பறவைகளுக்கு உணவளித்தல்.

**மிதுனம்:** ராசிநாதன் புதன் 12 இல், ராசியில் சூரியன், ராசிநாதனுடன் பஞ்சம, விரய மற்றும் யோகாதிபதி சுக்கிரன், 11 இல் ராகு, 10 இல் குரு செவ்வாயுடன் சேர்க்கை, 9 இல் சனிபகவான், 5 இல் கேது மனத்தெளிவு, சந்தோசம் உண்டாகும். தாயார், சகோதரி உறவுகள் வழியில் ஆதாயம் ஆதரவு உண்டாகும். நீர்நிலைகளுக்கு சுற்றுலா சென்று வருவீர்கள். தந்தை அரசு வழியில் சிறிது டென்ஷன் ஏற்படும். பணியாளர், தொழிலாளர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். உரிய அங்கீகாரம் ஆதாயம் அடைவீர்கள். வியாபாரிகள் தற்காலிகமாக கடன் விற்பனையை குறைத்து கொள்ளவேண்டும். பின்னர் வசூல் செய்வது சிரமத்தை உண்டாக்கும். அரசு சம்பந்தப்பட்ட பணிகள் சுலபமாக நிறைவேறும். பிள்ளைகளின் படிப்பில் தடை தாமதம் உண்டாகும். மந்த நிலை நீடிக்கும். துணையின் வழியில் ஆதரவு அனுசரணை உண்டு. புதிய திட்டங்களை நன்கு ஆலோசித்து முடிவெடுக்கவும். அவசர திட்டம் முடிவதில் தடை தாமதம் உண்டாகும் வாய்ப்புகள் அதிகம். ஆரோக்கியம் சீராக இருக்கும். புனித யாத்திரை செல்லும் வாய்ப்புகள் கூடிவரும். விருந்தினர் வருகையை எதிர்பார்க்கலாம். பரிகாரம்: சனிபகவானுக்கு எள் விளக்கு, வயதான, உடல் ஊனமுற்றோருக்கு உதவி.



**கடகம்:** ராசிநாதன் சந்திரன் ராசிக்கு 7 இல், 19, 20 தேதியில் கும்பத்தில் சனி பகவானுடன் இணைகிறார். சூரியன் 12 இல், யோகாதிபதி செவ்வாய் மீனத்தில் குருவுடன் சேர்க்கை, 10 இல் ராகு 4 இல் கேது, லாபாதிபதி சுக்கிரன் விரயாதிபதி புதனுடன் சேர்ந்து 11 இல் உற்சாகம் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியம் மேம்படும். தொழில் குடும்பநிலவரம் சீராக திருப்திகரமாக இருக்கும். தனவரவு உண்டு. வண்டி வாகன சேர்க்கை, நிலபுலன் சேர்க்கை உண்டாகும். சில ஆடம்பர செலவுகள், குழந்தைகளின் தேவைக்காக செலவுகள் ஏற்படும். சுப செலவுகள் அதற்கான கடன்கள் ஏற்படும். அரசு மற்றும் தந்தை வழி உறவுகளால் நன்மை உண்டாகும். தொழிலாளர்கள், பணியாளர்கள் அதிகம் உழைக்கவேண்டிவரும் உரிய பலன்கள் கிடைக்கும். நீண்டகால முதலீடுகள் பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். குழந்தைகளுக்கு உஷ்ண சம்பந்தமான தொந்தரவுகள் வந்து போகும். குளிர்ச்சியான உணவுவகைகளை அளிக்கவும். துணைவருக்கு எதிர்பார்த்த வளர்ச்சி முன்னேற்றம் உண்டு. தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. 19, 20 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். பரிகாரம்: சூரிய நாராயணன், சுப்பிரமணியர் வழிபாடு, வயதில் மூத்தோருக்கு உதவி.



**சிம்மம்:** ராசிநாதன் சூரியன் மிதுனத்தில், 2, 11 குடைய புதன் ரிஷபத்தில் 3, 10 குடைய சுக்கிரனுடன் சேர்க்கை,, 7 இல் சனிபகவான் தனது ஆட்சி வீடான கும்பத்தில், 8 இல் யோகாதிபதி செவ்வாய் தனகாரகனான குருவுடன் சேர்க்கை, 9 இல் ராகு, 3 இல் கேது, வார தொடக்கத்தில் 6 இல் சந்திரன் வேலை தொழிலில் ஆதாயம் யோககாரகன் செவ்வாயின் பார்வை 11, 2 இல், நீண்டகால ஆசைகள் விருப்பங்கள் நிறைவேறும். சிலருக்கு பூர்வீக சொத்துக்கள், இன்ஷூரன்ஸ், மற்றும் நீண்ட கால முதலீடுகள் மூலம் ஆதாயம் வரும். அரசு பணியாளர்களுக்கு எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். நீண்ட காலம் தாமதமாக காரியம் முடியும். மாணவர்கள் எதிர்பார்த்த படிப்பில் சேர்வார்கள். தொழிலாளர் பணியாளர்கள் நிலை சிறப்பாக இருக்கும். வேலைப்பளுவும் இருக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் சிலருக்கு ஏற்படும். தர்ம காரியங்களுக்காக செலவிடுவீர்கள். புதிய முயற்சிகளில் தடை தாமதம் உண்டாகும். தைரிய குறைவு ஏற்படும். 21, 22 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். ஜாதகரின் நீண்டநாள் தேவைகள் எதிர்பாராத விதமாக நிறைவேறி மகிழ்ச்சி அளிக்கும். துணையின் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தாயாரிடம் அனுசரித்து செல்லவும். விவாதங்களை தவிர்க்கவும். பரிகாரம்: தக்ஷிணாமூர்த்தி வழிப்பாடு, சான்றோர், தர்ம காரியங்களுக்கு உதவி.



**கன்னி:** ராசிநாதன் புதன் ராசிக்கு தர்ம திரிகோணமான 9 இல் சுக்கிரனுடன், 10 இல் சூரியன், இரண்டில் கேது, 6 இல் சனி பகவான், 7 இல் ஆட்சிபெற்ற குரு உடன் செவ்வாய் சேர்க்கை, 8 இல் ராகு, 19, 20 தேதிகளில் 6 இல் சந்திரன் சுக சௌகரியம் கூடும். ஆடம்பர பொருட்களின் சேர்க்கை உண்டு. சுப செலவுகளுக்காக கடன்வாங்க நேரிடும். சிறிய பயணங்கள் ஏற்படும். சிறு சிறு டென்ஷன் வந்து போகும். அரசு வழி காரியங்கள் அனுகூலமாகும். அரசு பணியாளர்கள் நிலை சிறக்கும். ஆதாயம்



உண்டு. தந்தை வழி உறவு வகையில் இழப்புகள் ஏற்படலாம். சீருடை பணியாளர்கள் உரிய அங்கீகாரம் பெறுவார். தொழிலில் மந்த நிலை நீடிக்கும். 19, 20 தேதிகளில் புதிய முயற்சிகளில் கவனம் தேவை. 21, 22 தேதிகளில் புதிய முயற்சிகள் செய்வது உத்தமம். தைரியம், உற்சாகம் கூடும். குருட்டு தைரியத்தை தவிர்த்து நன்கு ஆராய்ந்து செயல்படவேண்டும். வியாபாரிகளுக்கு திடீர் தனவரவு, நீண்டநாள் வசூலாகாத கடன்கள் வசூலாகும். மாணவர்கள் நிலை சீராக இருக்கும். சிலருக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாம். உடனுக்குடன் பரிசோதனை செய்துகொள்வது நல்லது. பணியாளர்களுக்கு சிறுது கடினமான காலகட்டம். பரிகாரம்: துர்க்கை வழிபாடு, சுமங்கலி பெண்களுக்கு உதவி.

**துலாம்:** ராசிநாதன் சுக்கிரன் ராசிக்கு 8 ஆம் பாவத்தில் ராகு மற்றும் 9, 12 குடைய புதனுடன் சேர்க்கை, 10குடைய லாபாதிபதி சூரியன் திரிகோணமான 9 இல், ராசியில் கேது, 5இல் சனி, சந்திரன் 6 இல் ருண, ரோக, சத்துரு ஸ்தானாதிபதி குரு, 7 இல் குடும்ப மற்றும் களத்திரகாரகன் செவ்வாய் ராசிநாதன் விரையாதிபதியுடன் சேர்ந்து 8இல் மற்றும் கேது 2இல் இருப்பது அவ்வளவு சிறப்பான அமைப்பல்ல. நீண்ட கால அனாவசிய கடன்களை ஏற்படுத்தலாம், ஆரோக்கிய விஷயத்தில் மிகுந்த கவனம் தேவை. வருமானம், தொழிலில் தொய்வு நிலை காணப்படும். வயதில் மூத்தோரிடம் வீண் விவாதங்களை தவிர்க்க வேண்டும். மாணவர்கள் படிப்பு நிலை சீராக இருக்கும். தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலைமை சீராக இருக்கும். தந்தை வழி சகோதர உறவுகளை சந்திப்பீர்கள். அரசு ஊழியர்கள் அரசு சார்ந்த விவகாரங்களில் சாதகமான காரியங்கள் நிகழும். தாயார் வழியில் ஆதரவு கிடைக்கும். சகோதர வழியில் இருந்த நீண்டகால பூர்வீக விஷயங்கள் சுமூகமாக முடியும். குடும்பத்தில் மூத்த பிள்ளைகளால் ஆதாயம் ஏற்படும். மாணவர்கள் விரும்பிய படிப்பில் இடம் கிடைக்கப்பெறுவார்கள். துணைவரிடம் அனுசரித்து செல்லவும். வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. 21, 22 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிப்பது நல்லது. பரிகாரம்: விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு, விலங்குகளுக்கு உணவளித்து உதவுதல்.



**விருச்சிகம்:** ராசிநாதன் செவ்வாய் பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் குருவின் ஆட்சிவீட்டில் குருவுடன் சேர்க்கை, சுக சௌகரிய ஸ்தானத்தில் சனிபகவான் சந்திரன் சேர்க்கை, ருண, ரோக ஸ்தானத்தில் ராகு பகவான், சப்தம ஸ்தானத்தில் சுக்கிரன் புதனுடன் சேர்க்கை, 8 இல் சூரியன், 12 இல் கேது ஆரோக்கியம் மேம்படும், உற்சாகம் கூடும், ஜீவ சமாதி, புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். புதிய பூமி சேர்க்கைக்கு நேரம் கூடி வரும். பணியிடத்தில் மறைமுக எதிரிகள் தொல்லை குறையும் செல்வாக்கு உயரும். தொழிலாளர்கள் நிலை சிறக்கும். எதிர்பார்த்த காரியங்கள் ஜெயமாகும். துணையில் வழியில் ஆதரவு, ஆதாயம் கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும், புதிய நவ நாகரீக பொருட்களின் சேர்க்கை உண்டு. சிலர் புதிய தொழில் தொடங்கலாம், இருக்கும் தொழில் விருத்தி அடையும். அரசாங்க அலுவல்கள் அதிக அலைச்சல் இன்றி நிறைவேறும். நீண்ட கால கடன்கள் அடையும். வசூலாகாத கடன்கள் வசூலாகும். உடல் நிலையில் அக்கறை தேவை. சிறு சிறு மருத்துவ செலவுகள் உருவாகலாம். குழந்தைகள், வீட்டில் உள்ள பெரியவர்களுக்கான மருத்துவ செலவுகள் ஏற்படும். தந்தை வழி உறவுகளை அனுசரித்து செல்லவும். பரிகாரம்: துர்க்கை அம்மன் வழிபாடு, நவகிரக வழிபாடு, வயதான, ஊனமுற்றோருக்கு உதவி.





**தனுசு:** ராசிநாதன் குரு சுகஸ்தானமான 4 இல் பஞ்சமாதிபதி செவ்வாயுடன், 3 இல் சனிபகவான் சந்திரனுடன் சேர்க்கை, 5 இல் ராகு, 11 இல் கேது, 6 இல் சுக்கிரன், புதன் சேர்க்கையாக 12மிட பார்வை, யோககாரகர் சூரியன் ராசியை தனது 7 ஆம் பார்வையால் பார்க்கிறார் 50/50 என்ற நிலையில் கிரக சாரங்கள் அமைகிறது. தொழில், வியாபாரம், பணியாளர்கள் நிலை சிறக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத இலாபத்தை அடைவீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று அதிக முயற்சியின்றி எதிர்பார்த்த படிப்பை தேர்ந்தெடுப்பார்கள். தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு செய்வீர்கள். மனைவி, பிள்ளைகள் வகையில் சிலருக்கு மருத்துவ செலவுகள் உண்டாகலாம். அரசு, அரசியல் சார்ந்த விஷயங்கள் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவு வகையில், மூத்த சகோதர வகையில் சிலருக்கு செலவுகள் ஏற்படும். துணையின் ஆரோக்கியத்தில் சிறுது கவனம் தேவை. உஷ்ண சம்பந்த, தலை சம்பந்த தொந்தரவுகள்

வந்து போகும். 24, 25 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. 26, 27 தேதிகள் சிறப்பானவை. பூர்வீக சொத்து சம்பந்தமாக சிலருக்கு செலவுகள் ஏற்படும். திருமணம், வைபவம் சிலரது இல்லத்தில் நிகழும் அது சம்பந்த செலவுகள் உண்டு. பரிகாரம்: மகாலக்ஷ்மி, விஷ்ணு வழிபாடு, சுமங்கலி பெண்களுக்கு உதவி.

**மகரம்:** ராசிநாதன் சனிபகவான் ராசிக்கு இரண்டில், ராசியில் சந்திரன், ராசிக்கு 3 இல் குரு சுய ராசியில் சுகஸ்தானாதிபதி செவ்வாயுடன் சேர்க்கை, 4 இல் ராகு சூரியனின் சாரம் பெற்று இருக்கிறார். 5 இல் பஞ்சமாதிபதி சுக்கிரனுடன் புதன் சேர்க்கை, 6 இல் சூரியன், 10 இல் கேது கிரக நிலைகள் அவ்வளவு திருத்திகரமாக இல்லை. தொழில் குடும்ப நிலை சீராக செல்லும். சிறு பயணங்கள் அதற்கான விரய செலவுகள் உண்டாகும். தாயார் உடல் நிலையில் கவனம் தேவை. மருத்துவ செலவுகள் உண்டு. குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள் எதிர்பார்த்த மதிப்பெண்கள் பெறுவர். தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலை உயரும். வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் அடைவார்கள். தொழில் விருத்தியாகும். ஜாதகரின் உடல்நிலையில் கவனம் தேவை. தேவையில்லாத பயணங்களை தவிர்க்கவும். தொழில் தொடர்பாக சிலருக்கு நீண்ட கால கடன்கள் உருவாகும். உஷ்ண சம்பந்த, தலை சம்பந்தபட்ட உபாதைகள் வந்து போகும். தன லாபம், வாகன லாபம் உண்டு. தர்ம காரியங்களுக்காக செலவு செய்வீர்கள். சகோதர, சகோதரி வகையில் ஆதரவு உண்டு. திருமணம், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சுப விரையம் உண்டு. அரசு பணியாளர்கள், அரசியல் வாதிகள் புதிய முயற்சிகள் சிறிது காலம் தள்ளிப்போடுவது நல்லது. பரிகாரம்: சூரியநாராயணர், துர்க்கை அம்மன் வழிபாடு. சான்றோர், பெரியோர்களுக்கு உதவி.



**கும்பம்:** ராசிநாதன் சனிபகவான் ராசியில் சந்திரனுடன், இரண்டில் தன ஸ்தானாதிபதி குரு தைரிய ஸ்தானாதிபதி செவ்வாயுடன் சேர்க்கை, மூன்றில் ராகு, 4 இல் யோகாதிபதி சுக்கிரனுடன் பஞ் சமாதிபதி புதன் சேர்க்கை, 9 இல் கேது ஆரோக்கியம், மனநிலை சீராக இருக்கும். உற்சாகமாக காணப்படுவீர்கள். தொழில், குடும்ப நிலவரம் திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகளுக்கு நீண்டகால கடன்கள் வசூலாகும். பணப்புழக்கம் சீராக இருக்கும். வேலை தேடிவரும் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்து போடுவதை நன்கு யோசித்து செய்வது நல்லது. வண்டி வாகன சேர்க்கை, அலங்கார பொருட்களின் சேர்க்கை ஏற்படும். தொழிலாளர்கள், பணியாளர்கள் எதிர்பார்த்த காரியங்கள் கைகூடும். அரசு பணியாளர்கள், அரசியல்வாதிகளின் முயற்சிகள் இலாபகரமாக இருக்கும். புனித யாத்திரை, குல தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நன்மை பயக்கும். காவல், ராணுவம், சீருடை பணியாளர்கள் பதவி, ஊதிய உயர்வு பெறுவார்கள். குழந்தைகள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உஷ்ணம் சம்பந்தமான தொந்தரவுகள் சிலருக்கு ஏற்படலாம். 17, 18 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.
பரிகாரம்: விநாயகர் வழிபாடு, சிறு விலங்குகளுக்கு உணவளித்தல்.



**மீனம்:** ராசிநாதன் குரு ராசியில் தனாதிபதி செவ்வாயுடன் சேர்க்கை, 12 இல் சனி பகவானுடன் யோகாதிபதி சந்திரன் சேர்க்கை, இரண்டில் ராகு, 3 இல் அஷ்டமாதிபதி சுக்கிரனுடன் சுகாதிபதி புதன் சேர்க்கை, 4 இல் 6ஆம் அதிபதி சூரியன், 8 இல் கேது வரவு செலவு சரியாக இருக்கும். சிலர் நீர் நிலைகளுக்கு சுற்றுலா சென்று வருவார்கள். ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. குடும்பத்தாரிடம் கோவம், கடுமை காட்டுவதை தவிர்க்கவும். குருட்டு தைரியத்தில் எடுக்கும் முடிவுகள் நீண்டகால பகை அல்லது கடன்களை உருவாக்க கூடும். கூடுமானவரை புதிய திட்டங்களை சிறிது காலம் தவிர்க்கவும். பொன், வெள்ளி, வண்டி வாகன சேர்க்கை உண்டாகும். வேலை தேடுபவர்கள் சிறந்த வேலை கிடைக்கப்பெறுவார்கள். மாணவர்கள் நிலை சீரான வளர்ச்சி காணும். தொழிலாளர்கள், பணியாளர்கள் சுமூக நிலை காண்பார்கள். அரசு, அரசியல் துறைகளை சார்ந்தவர்கள் ஆதாயம், வளர்ச்சி காண்பர். அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் விரைந்து நிறைவேறும். 18, 19 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 24, 25 தேதிகள் சிறந்த பலனளிக்கும். சிலர் தாயார் வழி உறவு சம்பந்தமாக துக்க செய்தி கேள்விப்படலாம். இனம் புரியாத கவலைகள் வந்து போகும்.
பரிகாரம்: ஆஞ்சநேயர், விநாயகர் வழிபாடு, விலங்குகளுக்கு உணவளித்தல்.






# திருடர்களை மிரளவைத்த அம்மன் தன்னை தானே பாதுகாத்துக்கொள்ளும் மிருதங்க சைலேஸ்வரி

இந்தியாவில் அமைந்துள்ள கோவில்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அந்த வகையில் கேரள மாநிலத்தில் பரசுராமரால் பிரதிஷ்டை செய்த கோவில்தான் மிருதங்க சைலேஸ்வரி கோயில், இக்கோவில் பரசுராமர் பிரதிஷ்டை செய்த 108 கோவில்களில் இக்கோவிலும் ஒன்று.

இந்தக் கோவிவில் வீற்றிருக்கும் அம்மன் மிகுந்த சக்தி வாய்ந்த அம்மன், கேட்டதை கேட்டவாறு தருவதில் இந்த அம்மனுக்கு ஈடு இணை யாரும் இல்லை, இப்படிப்பட்ட கோவிலில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்கள் குறித்து விசாரணை அறிக்கை தாக்கல் செய்த போது இக்கோவிலின் சக்தி என்ன என்பது வெளியே தெரியவந்துள்ளது.

சுருக்கமாக சொல்லவேண்டுமென்றால் திருடர்களின் வாக்குமூலத்தால் இந்தக் கோவில் உலகெங்கும் பிரசித்தி பெற்று வருகிறது.

சமீபகால வரலாற்றில் நான்கு முறை, இந்தக் கோவில் திருட்டு சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. ஆனாலும் இந்தச் சிலையை திருடிச் சென்றாலும், வெகுதூரம் செல்ல முடியாததால் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டனர். அவர்கள் சொன்ன காரணங்கள், கதையை இன்னும் சுவாரஸ்யமாக்குகிறது.

மிருதங்க சைலேஸ்வரி கோயில், கேரளாவின் தென் மாநிலத்தின் கண்ணூர் மாவட்டத்தில் உள்ள முழக்குன்னுவில் அமைந்துள்ள ஒரு பழமையான கோயிலாகும். இந்த கோவிலுக்கு "மிருதங்க சைலேஸ்வரி" என்று பெயர் வந்ததற்கு ஒரு கதை உள்ளது.

மிருதங்கம் என்பது பண்டைய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு தாள வாத்தியம். மிருதங்கம் தேவ வாத்யம், கடவுள்களின் இசைக்கருவி என்றும் அழைக்கப்படுகிறது. மிருதங்க வடிவில் உள்ள ஒரு பாறை, ஒரு விண்கல், இந்த இடத்தில் சொர்க்கத்திலிருந்து விழுந்ததாகவும், தேவியின் இருப்பை உணர்ந்த பரசுராம முனிவர், அவளை பாறைக்குள் அழைத்து, அவளுக்கு ஒரு கோயிலை நிறுவியதாகவும் நம்பப்படுகிறது.

மிருதங்க ஷைலேஸ்வரி கோயில் தென்னிந்திய பாரம்பரிய நடனமான கதகளியின் பிறப்பிடமாகவும் கருதப்படுகிறது. இக்கோயிலில் சக்தி தேவி காளி, சரஸ்வதி, லட்சுமி என மூன்று வடிவங்களில் காட்சி தருகிறாள்.


www.aanmeegamalar.com

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, Rtd. கேரளமாநில காவல்துறை தலைமை இயக்குனர் ஸ்ரீ அலெக் சாண்டர் ஜேக்கப், இந்த கோவிலில் முந்தைய ஆண்டுகளில் நடந்த நான்கு கொள்ளைசம்பவங் களின் கதைகளை பகிரங்கப்படுத்தி னார். கோயில் சிலையின் மதிப்பு சுமார் 2 கோடி இருக்கும். கோவிலை சுற்றி பாதுகாப்பு இல்லாததால், திருடர்களின் இலக் காக இது இருந்தது.

கோவிலில் முதல் உடைப்பு 1979 –இல் நடந்தது. திருடர்கள் கோயி லில் இருந்து சிலையை எடுத்துச் சென்றனர், ஆனால் மறுநாள் காலை, கோவிலில் இருந்து சில மீட்டர் தூரத்தில் சிலை இருந்தது. போலீசாரால் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. முறைப்படி சிலையை கைப்பற்றி பூஜா விதிகள் கடைபிடிக்கப்பட்டு சிலை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்கான சடங்கு 41 நாட்கள் நீடிக்கும் மற்றும் சில மந்திரங்களை 41 லட்சம் முறை சொல்ல வேண்டும்.

சில வருடங்கள் கழித்து மீண்டும் ஒரு திருட்டு முயற்சி நடைபெற்றது. ஆனால் இம்முறை சிலையை கண்டுபிடிக்க முடியாமல் போலீசார் தடய விசாரணை நடத்தி வந்தனர். கோயில் நிர்வாகிகள் அஷ்ட மங்கள தேவபிரஷ்னைக்கு செல்ல முடிவு செய்தனர். அஷ்ட மங்கள தேவ பிரஸ்னா காரணங்களைக் கண்டறியவும்,பரிகார நடவடிக்கைகளைத் திட்டமிடவும் நடத்தப்படுகி றது.

தேவபிரஷ்ணத்தின் மூலம், சிலை தமிழ்நாடு மாநிலத்தை நோக்கி பயணிக்கிறது என்று கணக் கிடப்பட்டது, ஆனால் தேவியின் சக்திவாய்ந்த சிலை அதன் சொந்த தெய்வீக சக்தியால் அதன் இருப்பிடத்திற்குத் திரும்பும் என்று பிரசன்னத்தில் வாக்கு அளிக்கப்பட்டது.

பிரசன்னத்தின்படி, 42 வது நாளில், தமிழகத்திற்கு அருகில் உள்ள பாலக்காட்டில் நெடுஞ்சாலை ஓரத் தில் கைவிடப்பட்ட சிலையின் குறிப்புடன் போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அந்த குறிப்பில், “மிரு தங்க ஷைலேஸ்வரி கோவிலில் இருந்து சிலை எடுக்கப்பட்டது, எங்களால் அதை மேலும் எடுத்துச் செல்ல முடியவில்லை. தயவு செய்து அதை கோவிலுக்கு திருப்பி விடுங்கள்” என்ற குறிப்பு காணப்பட்டது.

மீண்டும் 41 நாட்கள்நடைபெறும் சடங்குகளுடன் முந் தைய முறை போலவே சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டது. ஆனால் இந்த முறையும் திருடர்களை காவல்துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இது இரண்டாவது முறை என்பதால், கோவிலுக்கு போலீஸ் பாதுகாப்பு போட்டு பாதுகாப்பை மேம்படுத்த போலீசார் பரிந்துரைத்தனர். ஆனால், இத்திருக்கோவில் "பிரதிஷ்ட கர்மா" முறைப்படி பரசுராமரால் அமைக்கப்பட்ட கோவில் அதனால், அம்மன் தன்னைக் காத்துக் கொள்வதாகக் கூறி கோயில் நிர்வாகத்தினர் மறுத்துவிட்டனர்.

விரைவிலேயே மூன்றாவது முறையாக திருடர் கள், இந்த முறை, கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது. இந்தத் திருட்டுக் கூட்டம் போலீசாரின் தேடுதலில் இருந்து தப்பிக்க வயநாடு காடுகளின் வழியாக கர்நாடகாவிற்கு சிலையை கடத்திச் செல்ல திட்டமிட்டனர். அடுத்த மூன்று நாட்களுக்கு போலீசார் துப்பு துலங்கவில்லை, ஆனால் இந்த முறை, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தவறி யிருந்தாலும், அம்மன் திரும்பி வருவார் என்று கோயில் அதிகாரிகளும் உள்ளூர் மக்களும் நம்பினர்.

மூன்றாவது நாள் மதியம், கேரளாவின் வயநாட் டில் உள்ள கல்பட்டாவில் உள்ள ஒரு லாட்ஜில் இருந்து காவல்துறைக்கு ஒரு மர்ம அழைப்பு வந்தது. தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்,

தன்னை கும்பலில் ஒருவராக அறிமுகம் செய்து கொண்டு சிலை இருக்கும் இடத்தை விவரித்தார். சிலையை எடுத்துச் செல்ல முடியாத காரணத்தால் சிலையை மீட்டுத் செல்லுமாறு போலீஸாரிடம் கோரிக்கை விடுத்தார். லாட்ஜில் இருந்த சிலையை போலீசார் கண்டுபிடித்தனர், சிலைக்கு அருகில் மலர்கள் மற்றும் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து வழக்கமான சடங்குகள் செய்யப்பட்டு சிலை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மிருதங்க சைலேஸ்வரி கோவிலில் இரண்டாவது கொள்ளை முயற்சியில் போலீசார் திருப்புமுனையை ஏற்படுத்தினர். கொச்சியில் உள்ள மற்றொரு கோவிலில் சிலையை திருட முயன்ற தமிழகத்தை சேர்ந்த சிலை திருடும் கும்பல் பிடிபட்டது. சில ஆண்டுகளுக்கு முன் மிருதங்க சைலேஸ்வரி சிலையை திருடியதை ஒப்புக்கொண்டனர். அதேபோல், மூன்றாவது திருட்டு முயற்சியின் பின்னணியில் இருந்தவர்கள் கேரளாவின் காசர்கோட்டில் உள்ள ஒரு கோவிலில் சிலையைத் திருட முயன்றபோது தற்செயலாக பிடிபட்டனர். மிருதங்க சைலேஸ்வரி கோவிலில் நடந்த மூன்றாவது திருட்டு முயற்சியில் தங்கள் பங்கை ஒப்புக்கொண்டனர்.

மிருதங்க ஷைலேஸ்வரி சிலையை பாதியிலேயே கைவிட்ட தொடர் திருடர்களின் பின்னணியில் உள்ள காரணத்தை அறிய காவல்துறையினர் முயற்சி செய்தனர். ஆனால் இந்த இரு திருட்டு கும்பல்களும் ஒரே காரணத்தை கூறியது போலீசாரை வியப்பில் ஆழ்த்தியது.

சிலையை தொட்டதும் திசை தெரியாமல் அனைவரும் குழப்பமான மனநிலைக்கு சென்று திசை தெரியாமல் மேற்கொண்டு முன்னேற முடியாமல் சிலையை பாதியிலேயே கைவிட முடிவு செய்ததாக அந்த இரண்டு திருட்டுக் கும்பலும் ஒரேமாதிரி சொன்னது வியப்பின் உச்சமாக இருந்தது.

மூன்று முயற்சிகள் தோல்வியடைந்தாலும் சிலை திருடர்களின் மற்றொரு கும்பலைத்தடுக்க முடியவில்லை. இந்த முறை கேரளாவில்உள்ள சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த அனுபவமிக்க திருடர்கள் கும்பல். சிலையின் அமானுஷ்ய சக்திகளை அவர்கள் நம்பவில்லை. திருடியபின் சிலையையும் கைவிட்டனர். பின்னர் பிடிபட்ட போது, சிலையை கைவிட்டதற்கும் அதே காரணத்தை கூறினர். தற்போது இந்த விசாரணையின் அறிக்கை வெளிப்படையாக கூறப்பட்டதால் இந்த அம்மனின் சக்தி வெளிவுலகிற்கு தெரியவந்துள்ளது. மனிதர்கள் எவ்வளவு புத்திசாலித்தனம் மற்றும் அறிவியல் அறிவைக் கொண்டு சிந்தித்தாலும், நமது சிந்தனா சக்திக்கும், மனித சக்திக்கும் அப்பாற்பட்ட ஒருசில நிகழ்வுகள் ஏராளமாக உள்ளது என்பது இந்த சிலை திருட்டு சம்பவத்திலிருந்து தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.



# 130 இதழ்களை கடந்துள்ளோம்

## ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம் 2.ஆன்மிகமலர் Mobile app

3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம்
ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு,
ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம்,
அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,
போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில்
வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:
சி.வி.நடராஜன் 9444228203

# முல்லை நிலத்திற்குரிய தமிழ்க்கடவுள் பெருமாள்

www.aanmeegamalar.com



இந்து மதத்தை தாக்குவதில் இன்பம் காணும் சில மேதாவிகள் இந்து மதத்தில் குறிப்பிடப் படும் தெய்வங்கள் எதுவும் தமிழ் நிலத்திற்கு தமிழ் மக்களுக்கு தமிழ் பண்பாட்டிற்கு சொந்தமானது அல்ல, வடக்கில் இருந்து ஆக் கிரமிப்பாக தமிழ்நாட்டில் புகுந்ததே ஆகும். என்று வீதி தோறும் மேடை போட்டு பேசி திரிகிறார்கள்.

அப்படிபட்ட விதண்டாவாதி களுக்கு பதில் சொல்ல வேண் டிய அவசியம் நமக்கில்லை என் றாலும், நம்மில் சிலருக்கு சில நேரங்களில் மனக்குழப்பம் வந்துவிடுகிறது.

**கடவுள் உருவாக்கிய மதம்**

கிறிஸ்தவ மதம் என்றால் அதை உருவாக்கியது ஏசுநாதர், இஸ்லாம் மதம் என்றால் அதை உருவாக்கியது முகமதுநபி, பௌத்த மதத்தை உருவாக்கியது புத்தர் என்று சொல்லலாம்.

அதே போல அம்மதங்கள் எந்த காலகட்டத்தில் தோன்றினஎன் பதையும் தெளிவாக சொல்லி விடலாம் ஆனால் இந்துமதத் தை இன்னார்தான் உருவாக் கினார்கள், இப்போது தான் உருவானது என்று யாராலும்

www.aanmeegamalar.com

**முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக கரிய நிற திருமால் கருதப்படுகிறான். இவன் பசுக்கூட்டங்களை காக்கும் காவலனாகவும் உலகத்து உயிர்கள் அனைத்துமே இவனால் காக்கப்படுகிறது, பகைவர்களிடம் இருந்து அடிமை படாமல் நாட்டையும் மக்களையும் காப்பாற்றுகின்ற அரசர் களும் திருமாலுக்கு ஒப்பானவர்கள் என்றும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.**

சொல்ல முடியவில்லை. அதனால் அவரவர் வாய்க்கு வந்த படி பேசுகிறார்கள், அதில் எது உண்மை எது பொய் என்று கண்டு பிடிப்பது கஷ்டத்திலும் மாகா கடினமாக இருக்கிறது.

மேலும் இந்து மத தெய்வங்கள் அவதாரம் எடுத்ததும் அருள்லீலை புரிந்ததும் இந்தியாவின் வடபகுதியில் என்றே புராண இதிகாச நூல்கள் சொல்லுகின்றன. அவற்றை வைத்து பார்த்தால் இந்து மத தெய்வங்கள் தமிழ் மண்ணுக்கு சொந்தமானது அல்ல, என்று சொல்வதில் உண்மை இருக்குமோ என்று நினைத்து குழம்ப வேண்டிய சூழ்நிலையும் வருகிறது.




இப்படி குழப்பம் அடைகிறவர்கள் நமதுசங்க கால தமிழ் நூல்களை மேலோட்டமாக புரட்டி பார்த்தாலே ஒரு தெளிவான முடிவுக்கு வந்து விடலாம்.

வெளியில் இருந்து வந்த ஆரியர்களால் தான் இந்து மதம் தோன்றியது என்று பல திராவிட பாரம்பரிய பரிவாரங்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

அதை ஒரு வாதத்திற்காக ஒத்துக் கொண்டால் கூட ஆரியர்கள் இந்தியாவிற்குள் வருவதற்கு முன்பே இந்த நாட்டில் உயரிய கலாச்சாரமும் நாகரிகமும் இருந்திருக்கிறது அக்கால மக்கள் நாத்திகம் பேசிக்கொண்டு அலையவில்லை.

மாறாக தன்னையும் தன்மனதையும் கட்டு படுத்தி, ஒழுக்கமுடன் வாழசெய்யும் இறை வழி பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக சிந்து சமவெளி நாகரிக தடையங்களும் தொல் பழங்கால தமிழ் இலக்கியங்களும் சான்று தரு கின்றன.

அந்த சான்றுகளில் மிக முக்கியமாக சிவன் திருமால் பிரம்மன் பார்வதி போன்ற இந்து மத தெய்வங்கள் வேத காலத்திற்கு முன்பே மக்களில் வழிபாட்டில் முக்கிய இடம்பெற்றிருப்பதை அறியலாம்.

எனவே, இந்து மதத்திற்கு எதிராக பரப்பப் பட்டு வரும் கருத்துக்கள் அனைத்துமே உள் நோக்கத்துடன் சொல்லப்படுகின்ற கற்பனை வாதங்களே ஆகும்.

உதாரணமாக ஸ்ரீ வைஷ்ணவத்தின் முழுமுதற் கடவுளான விஷ்ணு தமிழ் மண்ணுக்குரிய தெய் வம் அல்ல வடபுலத்தில் இருந்து வந்ததே ஆகும் என்று சிலர் சொல்லி வருகிறார்கள், அவர்கள் கூற்றில் எத்தனை சதவிகிதம் உண்மை இருக்கிறது என்பதை சற்று ஆராய்வோம்

சங்கத்தமிழ் நூல்களிலேயே மிக மூத்ததும் உலக இலக்கியங்களில் மிக தொன்மையானது மான தொல்காப்பியத்தில் முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக கரிய நிற திருமால் கருதப்படுகிறான்.

இவன் பசுக்கூட்டங்களை காக்கும் காவலனாகவும் உலகத்து உயிர்கள் அனைத்துமே இவனால் காக்கப் படுகிறது என்றும் தொல்காப்பியம் கூறுவ தோடு பகைவர்களிடம் இருந்து அடிமை படாமல் நாட்டையும் மக்களையும் காப்பாற்றுகின்ற அரசர் களும் திரு மாலுக்கு ஒப்பானவர்கள் என்று பேசுகிறது.

"மாயோன் மேய மன்பெறுஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"

என்று இலக்கணம் அமைத்து தருகிறார் தொல்காப்பியர், தொல்காப்பியம் மட்டும்



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

அல்ல புறநானுறு கூட திருமாலின் அவதாரமான கண்ணபெருமானை பாடுகிறது.

பூவை பூ வண்ணனான கண்ணனும் அவன் அண்ணனான பலராமனும் இணைந்து எதிரிகளை வாட்டி வதைப்பதை போல் இருபெரும் வேந்தர்கள் ஒருங்கிணைந்து நிலை பெறுமாறு காவிரி பூம்பட்டினத்தின் புலவர் காரிக்கண்ணன் புறநானூற்றில் பாடுகிறார்

"பானிற உருவிற் பனைக்கொடி யோனும்
நீனிற் உருவின் நேமியோனும் என்று
இருபெருந் தெய்வமும் உடனின் றாஅங்கு
உருகெழு தோற்றமொடு உட்குவர விளங்கி
..... இசை வாழியவே"

இந்த பாடலில் பனைக்கொடியோன் என்ற வார்த்தை கண்ணனின் மூத்தவனான பலராமனை குறிக்கிறது.

இதை வைத்து பார்க்கும் போது பாகவதத்தில் இறை சகோதரர்கள் இருவரின் சிறப்புகள் எழுதபடுவதற்கு முன்பே மக்கள் மத்தியில் அவர்கள் இருவரும் வழிபாட்டுக்குரிய தெய்வங்களாகவும், உதாரண புருஷர்களாகவும் இருந்தார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

அதுவும் குறிப்பாக தமிழகத்திலேயே இந்த மரபு ஆழமான வேர்விட்டு பரவி இருந்ததை அறிய முடிகிறது.

சங்ககாலத்தில் இறைவனை பாடு பொருளாக கொண்டு எழுதப்பட்ட திருமுருகாற்று படை பரிபாடல் முதலிய நூல்களை தவிர அனைத்து தொகை நூல்களிலும் உதாரணங்களை எளிமையாக புரிந்து கொள்வதற்கு திருமாலின் சிறப்புகளே பல இடங்களில் எடுத்தாழப்படுகின்றன.

கலித்தொகையில் வரும் ஒரு குலை ஒருவன் போல் இணர்சேர்ந்த மராஅமும் என்ற வரியும் கொடுமிடல் நாஞ்சிலான் தார் போல் மராத்து என்ற வரியையும் உதாரணமாக சொல்லலாம்.

இது தவிர கலித்தொகைலேயே ஏராளமான பாடல் வரிகளில் திருமாலின் அருள் விளையாடல்கள் விவரித்து வியந்து பாரட்டபடுகின்றன.

அதே போல பழம் தமிழ்மக்கள் சிவபெருமானுக்கு திருவாதிரை நட்சத்திரத்தில் விழா எடுத்து கொண்டாடுவது போல் திருமாலுக்கு திருவோண நட்சத்திரத்தில் விழா எடுத்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# இறைவன் வாழ்க்கையிலிருந்து வெளியேற்றும்பொழுது அச்சம் நுழைகிறது

மிகுந்த அன்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: “வாழ்வு, இறப்பு ஆகியவற்றைப்பற்றி அறியவேண்டிய எவ்வளவோ அற்புதமான விஷயங்கள் உள்ளன. அதற்கு உரிய மார்க்கம் தியானம் தான். இறைவனின் ஒரு புதல்வனாக இவ்வுலகில் வாழக்கற்றுக்கொள்ளுங்கள். தனது வாழ்க்கையிலிருந்து இறைவனை விட்டுவிட்டதால் மனிதனுக்கு மரணம் அச்சத்தைக் கொடுக்கின்றது. உலகத்தின் மர்மத்தையும் அதன் நோக்கத்தையும் புரிந்துகொள்ளாது நாம் அதை நேசிப்பதால், துன்பம் தருகிற அனைத்து விஷயங்களும் நம்மை பயமுறுத்துகின்றன. ஆனால் அனைத்தையும் இறைவனாக நாம் காணும்பொழுது நாம் பயப்படுவதற்கு எதுவுமில்லை. நாம் வாழ்விலும் மரணத்திலும் சதா பிறந்த வண்ணம் உள்ளோம். மரணம் என்பது ஒரு மாபெரும் தவறான சொல். ஏனெனில் மரணம் என்பதே இல்லை. வாழ்வில் நீங்கள் களைபுற்றதும் நீங்கள் சதையாகிய மேலங்கியை வெறுமனே அகற்றிவிட்டு சூட்சும உலகத்திற்குத் திரும்புகிறீர்கள்.”

“மரணம் என்பது ஒரு முடிவைக் குறிக்கின்றது. ஒரு மோட்டார் வாகனத்தின் பாகங்கள் தேய்ந்துவிட்டால், அந்த வாகனம் மரித்துவிடுகிறது. அது ஒரு முடிவிற்கு வந்துவிட்டது. அதேபோன்று ஸ்தூல சரீரமும் இறப்பில் முடிவிற்கு வருகிறது. ஆனால் அழிவற்ற ஆன்மா இறக்க முடியாது. ஒவ்வொரு இரவிலும் உறக்கத்தில் ஸ்தூல தேகத்தின் எவ்வித உணர்வும் இன்றி ஆன்மா வாழுகின்றது;, ஆனால் அது இறந்துவிடவில்லை. மரணம் என்பது ஒரு மகா நித்திரை மட்டுமே. அச்சமயத்தில் ஆன்மா ஸ்தூல தேகத்தின் உணர்வு இல்லாது தனது சூட்சும தேகத்தினுள் வாழ்கின்றது. ஸ்தூல தேக உணர்வுநிலை இழப்பு மனிதனுக்கு மரணத்தைக் குறிக்குமானால் நாம் தூங்கும்போது ஆன்மா இறந்து விடும். ஆனால் நாம், தூங்கும்போது, நாம் இறந்துவிடுவதில்லை; அத்துடன் முழுமையாக உணர்வற்ற நிலையிலும் நாம் இல்லை; ஏனெனில், நாம் விழித்தெழுந்ததும், நாம் நன்றாக நித்திரை செய்தோம் அல்லவா என்பது ஞாபகம் இருக்கிறது. ஆகவே




133 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

மரணத்திற்குப் பிந்தைய நிலையிலும் நாம் இறப்பதில்லை.”

மேலும் அவர் தொடர்கிறார்: “தங்களுடைய மனங்களைக் கல்லாக மாற இடமளிப்பவர்கள் மட்டும் உண்மையில் மரித்தவண்ணம் உள்ளனர். வாழ்வின் மர்மத்தைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஒவ்வொரு நாளும் புதிதாகப் பிறந்தாக வேண்டும். இதன் பொருள் என்னவெனில் ஏதாவது ஒருவிதத்தில் உங்களை முன்னேற்றிக்கொள்வதற்கு நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக விவேகத்திற்காகப் பிரார்த்தியுங்கள்; ஏனெனில் விவேகத்துடன் மற்ற அனைத்தும் வந்தடையும். மனநிலைகளால் கட்டுப்படாமல் விவேகத்தால் கட்டுப்பட்டிருங்கள். மேலும் அந்த விவேகத்துடன் ஆக்கபூர்வமான சிந்தனையையும் செயல்பாட்டினையும் வளர்த்துங்கள். உங்களுடைய சுய அபிவிருத்திக்காகவும் மற்றவர்களின் நன்மைக்காகவும் ஆக்கபூர்வமானவற்றைச் செய்துகொண்டிருப்பத்தில் மும்முரமாகஇருங்கள். ஏனெனில் இறைவனின் ராஜ்யத்திற்குள் நுழையும் எவருமே ஒவ்வொரு நாளும் மற்றவர்களுக்கு நன்மை செய்ய முயலவேண்டும். இந்த முறையை பின்பற்றினால், நீங்கள் மனோரீதியாகவும், தேகரீதியாகவும், ஆன்மீகரீதியாகவும் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள் ளும் உற்சாகமற்ற மனநிலையை அகற்றும் ஆனந்தத்தை உணர்வீர்கள். நீங்கள் நிச்சயமாக இறைவனை அடைவீர்கள். ஏனெனில் அந்த மார்க்கம் சுவர்க்க ராஜ்யத்திற்கு அழைத்துச செல்கிறது.”

“மனநிலைகளை வெல்வதற்கு தொடர்ந்து பாடுபடுங்கள். ஏனெனில் நீங்கள் உற்சாகமற்ற மனநிலையை உணர்ந்த உடனேயே உங்களுடைய ஆன்மாவாகின்ற பூமியில் தவறு என்னும் விதைகளை பயிர் செய்கின்றீர்கள். உற்சாகமற்ற மனநிலைகளில் ஈடுபடுவது படிப்படியாக இறப் பைதைப் போலாகும். எந்த சீர்குலைக்கும் அனுபவங்களையும் பொருட்படுத்தாது, நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க தினமும் முயற்சி செய்வீர் களானால், உங்களுக்கு ஒரு புதிய பிறவி கிடைக்கும். இந்த மானிடப்பிறவி மேன்மையான ஆன்மீகப் பிறவியாக மாற்றமடையும் வரையில் நீங்கள் இறைவனில் மறுபடியும் பிறக்க முடியாது.”

“மனநிலைகள் ‘பரவுந்தன்மை’ உடையன, மேலும் பொதுவான மனஅழுத்தம் உள்ள சமயங்களில் அதிக எண்ணிக்கையில்



குருப்ரியா

மக்களை பாதிக்கக்கூடும். வாழ்க்கையில் ஏற்படும் துன்பகரமான சம்பவங்களை மனிதன் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒவ்வொரு துரதிர்ஷ்டத்தையும் ஒரு துன்பகரமான நிகழ்வாக ஆக்குவதைவிட சிறிதளவு சிரிப்பதே மேலானது. கீதை போதிக்கின்றது. “(உண்மை போன்று தோன்றுகின்ற வாழ்வின் அம்சங் களாகிய) இன்ப, துன்பங்களைப்பற்றிய மகிழ்தலையோ அல்லது வெறுத்தலையோ உணராதவன்; துன்புறுதலையும் துறந்தவன்; நன்மை, தீமையைப்பற்றிய உணர்வைத் துறந்தவன்; தீவிர பக்திமான் எவனோ, அவனே எனக்குப் பிரியமானவன்.” (பகவத் கீதை அத் 13 ஸ்லோகம் 17) அனைத்தும் நன்மையாகவே நடக்கும் என்ற மனப்பாங்கைப்பெற்று புன்னகை புரிய முயல்வது ஆக்கபூர்வமானதும் பயனுள்ளதுமாகும். ஏனெனில் தெய்வீகப் பண்புகளான தைரியத்தையும் ஆனந்தத்தையும் நீங்கள் வெளிப்படுத்தும்போது. நீங்கள் மறுபடியும் பிறக்கிறீர்கள். உங்களுடைய ஆன்மா’வின் உண்மையான இயல்பின் வெளிப்பாட்டினால் உங்கள் உணர்வுநிலை புதுப்பிக்கப்படுகின்றது. இதுவே உங்களை “இறைவனின் ராஜ்யத்தைக் காணச் செய்யும்” ஆன்மீக மறுபிறப்பாகும்”.

“வாழ்க்கையில் துன்பகரமான சம்பவங் களை மனிதன் மிகவும் தீவிரமாக எடுத் துக்கொள்ளக்கூடாது” என்று குருதேவர் போதிக்கிறார். அதைத் தொடர்ந்து அவர் ஏராளமான விஷயங்களை வெளிப்படுத்தி யுள்ளார். இந்தக்கட்டுரைக்கும் அதற்கான ‘இப்பொழுதே செய்யலாம்’ என்ற ஒரு கதையை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன். அதைப்படிக்க அன்புக்குரிய வாசகர்களை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். கிழக்கே இருந்த நாட்டையும் தன் ஆட்சிக்குக் கொண்டுவர நினைத்தான் அவன். பெரும்பாட்டை திரட்டி அந்நாட்டை முற்றுகை இட்டான். பல நாட்கள் கடும்போர் நடந்தபின்னர் அந்நாட்டைக் கைப்பற்றினான். வெற்றிவீரனாகத் திரும்பும் அரசனை வரவேற்க நாடே விழாக் கோலத்துடன் காட்சி அளித்தது. நாடு திரும்பிய அரசன் தலைநகரத்தில் இருந்த துறவி ஒருவரின் அருளாசியைப்பெற அவரிடம் சென்றான். அரசனை வரவேற்ற அவர், “உன் எண்ணம் நிறைவேறியது. இப்பொழுது மகிழ்ச்சிதானே” என்று கேட்டார். “துறவியாரே!

என் முன்னோர்கள் யாராலும் சாதிக்க முடியாத செயலைச் செய்துள்ளேன். என் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? தங்கள் ஆசியை நாடி வந்துள்ளேன்," என்றான் அரசன். "உன் அடுத்த திட்டம் என்ன?" "இனி மேற்கிலுள்ள நாட்டை என் ஆட்சியுடன் இணைப்பதுதான்" "அதற்குப்பிறகு என்ன செய்வதாகத் திட்டம்?" %இன்னொரு பக்கம் உள்ள நாட்டையும் வெல்வது தான்". "அதற்குப் பிறகு?" " என் நாட்டைச் சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் என் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கும். அதன்பிறகு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆட்சி செய்வேன்."

"அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆள்வதுதான் உன் எண்ணம் என்றால், அதை நீ இப்பொழுதே செய்திருக்கலாமே. அடுத்த நாட்டின்மீது படையெடுத்து இரு நாட்டு வீரர்களும் போர்களத்தில் இறந்து இருக்கவேண்டாமே," என்று கேட்டார் துறவி.

இதைக் கேட்டதும் அரசனின் அறிவுக் கண்கள் திறந்தன. துறவியைப் பணிந்து விடைபெற்றான்.

இந்தக் கதையில், அரசன் பல நாடுகளை தன் ஆட்சிக்குக் கொண்டுவரத் திட்டமிட்டான். அது அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற் காகத்தான் என்று அரசன் துறவியிடம் கூறினான். துறவி அரசனுடைய அறிவுக்கண்களைத் திறந்தார். இந்தக் கதையில் அரசன் பல நாடு களை வெல்வதற்குப் பதிலாக இறைவனின் சாம்ராஜ்யத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கலாமே! அதற்காக அவன் முயற்சி செய்திருக்கலாமே! அவ்வாறு செய்திருந்தால் அவன் எண்ணப்படி மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்திருக்க லாம். ஆனால் இந்தக் கதையின் கருத்து மாறாக அமைந்துள்ளதாக நினைக்கிறேன். ஆனால் அரசன் முதலில் தவறு செய்துவிட்டிருந்தாலும் இறுதியில் அவன் தவறை உணர்ந்தான். அது அந்த துறவியால்தான்; துறவியின் சகவாசத்தால்தான் அரசன் திருந்தநேர்ந்தது.

இவ்வாறு, மகான்களின் சகவாசம் அல்லது அவர்களின் தொடர்புடைய மனிதர்கள் பெரும் பான்மையினரும் தப்பித்துக்கொள்வர். நம் குரு தேவரின் தொடர்புடையவர்கள் நிச்சயமாக தவறு செய்திருந்தாலும் உணரச்செய்யப்படுவர். எனவே நம் குருதேவரின் போதனைகள் நமக்கு ஒரு பெரிய பரிசு இறைவன் அருளிய பரிசு – ஆக எண்ணி அவற்றைக் கடைபிடித்து நம் குறிக்கோளை நிறைவேற்றுவதே நம் கடமையாக நினைக்கவேண்டும். அதற்காக முயற்சி செய்தல் மிகவும் அவசியமானதே ஆகும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

## பாறைவடிவில் காட்சியளித்த பாபா

# திருச்சியில் அமைந்த பிரம்மாண்ட சீரடி

2009-ம் ஆண்டின் ஒரு நாள் நடுநிசியில் நடந்தது அந்த அற்புத நிகழ்வு. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பக்தர் ஒருவரை யாரோ தட்டியெழுப்புவது போன்ற உணர்வு. ஓரிருமுறை அந்த உணர்வை பொருட்படுத்தாமல் ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை மறந்திருந்த அந்த பக்தரை இடியோசை போன்ற அசரீரி திடுக்கிட்டு எழ வைத்தது.

சப்தநாடிகளையும் பேரமைதிக்குள் ஆழ்த்தும் சாய்பாபாவின் குரல்தான் அது. ஊர் உறங்கும் வேளையில் அந்தக்குரல் மட்டும் பக்தரின் காதில் ரீங்காரமிட்டபடியே இருந் தது. பக்தா எழுந்திரு உன்னைத்தேடி நான் வந்திருக்கிறேன். என் குரல் உனக்கு கேட்கவில்லையா? என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் பக்தரின் மனதுக்குள் ஊடுருவியது.

ஆன்மிகமலர்

திடுக்கிட்டு எழுந்த அந்த பக்தர் தான் கண்டது கனவு என்றெண்ணி மீண்டும் துயில்கொள்கையில், விடாமல் ஒலித்துக்



www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com






www.aanmeegamalar.com

கொண்டே இருந்தது அந்த அசரீரி. என்னைத் தேடி சீரடிக்கு நெடுந்தூரம் கவலைகளோடும் அல்லலோடும் உடல்சோர்வோடும் பயணித்து வரும் பக்தர்களின் நிலைமை கண்டு மனமுருகி வந்துள்ளேன். தெற்கே எனக்கு ஒரு சீரடியை போல் எழுப்பு. அங்கு நீக்கமற நிறைந்து அருள் பாலிக்கக் காத்திருக்கிறேன் என்றார் சாய்பாபா.

தொடர்ந்து தினமும் இரவில் அதே குரல் பக்தரின் நித்திரையைக் கலைத்தது. தெய்வீக அனுபவமாய் பாவித்து அதனை அலட்சியம் செய்யாமல் கூர்ந்து கவனித்தபோது,தென்னாட்டில் காவிரியும் கொள்ளிடமும் பாயும் ஆன்மீக மாநகரமான திருச்சி சமயபுரம் அருகே அக்கரைப்பட்டி என்னும் இடத்தில் சீரடியைப்போலவே இருபாறைகளுக்கு இடையில் முளைத்த வேப்பமரத்தின் அடியில் அமர்ந்திருந்து அருள்பாலிப்பதை சாய்பாபா தத்ரூப மாக வெளிப்படுத்தினார். ஆம். அவருக்குரிய இடத்தை அவரே காண்பித்தார்.

சாய்பாபா கட்டளைப்படியே இந்த குருஸ்தானத் தில் 2011ம் ஆண்டு ஏப்ரல் 21ம் தேதி சாய்பாபா கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். தொடர்ந்து 2016ம் ஆண்டு பிப்ரவரி 12ம் தேதி தென்சீரடி ஆலயத் துக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

சாய்பாபா காட்சியளித்த ஸ்ரீசாய்கற்பகவிருக்ஷா அறக்கட்டளை நிறுவனர் கே.சந்திரமோகன் தலைமையில் பக்தர்களின் உதவியோடு இரவு பகலாக கட்டுமானப்பணி நடந்து முடிந்து கடந்த 2020ம் வருடம் ஜனவரி 20ம் தேதி பீடாதிபதிகள், ஆன்மீகத் தலைவர்கள், பக்தர்கள், தொண்டர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் கோலாகலமாக, மஹா கும்பாபிஷேகம் கண்டுள்ளது தென்ஷீரடி சாய்பாபா ஆலயம்.

ஷீரடிக்கு நிகரான மகிமையோடும் கம்பீரத் தோடும் கட்டிடக்கலையம்சம் குறையாமல் அச்சு அசலாக மற்றொரு சீரடியாக தென்சீரடி உருவாகி யுள்ளது. சீரடியின் எந்த அம்சமும் குறைவுபடாத அளவிற்கு சமாதி மந்திர், சாவடி, துவாரகாமாயி, லெண்டித்தோட்டம் என சகலமும் தென்சீரடியில் அமைந்திருக்கிறது. இவைதவிர, கிருஷ்ணர், ஆஞ்சநேயர், தத்தாத்ரேயர், விநாயகர் சிவன் போன்ற மூர்த்திகளுக்கும் அழகிய சந்நிதிகள் தனித்தனியே அமைக்கப்பட்டு ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெற்றுவருகின்றன. சாய்பாபாவிற் கான ஆராதனைகளும், பூஜைகளும் சீரடியில் நடப்பது போல் நடக்கின்றன. காலையில் காகட் ஆரத்தி, மதிய வேளையில் மத்யான் ஆரத்தி, மாலையில் தூப் ஆரத்தி, இரவில் சேஜ் ஆரத்தி என 4 வேளை ஆரத்திகளும் நடக்கின்றன.



www.aanmeegamalar.com







தினந்தோறும் பக்தர்களுக்கு அன்னதானமும் நடக்கிறது. சாய்பாபாவிற்கு உகந்த வியாழக் கிழமைகளில் மட்டும் ஆயிரங்களின் எண்ணிக் கையில் பக்தர்களின் வருகை அதிகரித்தபடியே உள்ளது.

அனைத்து மதத்தினருக்கும் பொதுவான குரு வாக பார்க்கப்படும் சாய்பாபா, இந்த தென்சீரடி தலத்தில் அநேக அற்புதங்களை நிகழ்த்தி வரு கிறார். குழந்தை வரம், திருமண வரம் என வரங்களை வாரித்தருகிறார்.

மனக்குழப்பம், குடும்ப பிரச்னை நீக்கி அமைதியையும் நம்பிக்கையையும் பக்தர்களுக்கு வழங்கி வருகிறார். அவரது கீர்த்தி உலகெங்கும் பரவியிருக்கிற சாய்பக்தர்களை சென்றடைந்தன் விளைவாக ஆன்மீக தலைவர்கள், திரையுலக பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், வெளிநாட்டு பக்தர்கள் என தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தென்சீரடிக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தென்சீரடி சாய்பாபா தங்களுக்கு நிகழ்த்திய அற்புதங்களை மெய் சிலிர்க்க விவரிக்கின்றனர்.

சீரடியின் பலனை மகிமை குறை யாமல் சாய்பாபா தென்சீரடியில் வழங்கி வருவதாக பக்தி பரவசம் பொங்க கூறுகின்றனர். சீரடி செல்ல முடியாதவர்கள் தென்சீரடியில் அதன் பலனை பெற முடியும் என்பதுதான் சாய்பாபா இந்த தலத்திற்கு வழங்கி யுள்ள சிறப்புத்தகுதி.


அழகுராஜா

வடஇந்தியாவிற்கு மகாராஷ்டிரத்தில் சீரடி என்றால், தென்னிந்தியாவிற்கு திருச்சி அக்கரைப் பட்டியில் தென்சீரடி என்ற புகழை இந்த ஆலயம் பெற்று உள்ளது.

ஒருமுறை வந்தால் மீண்டும் மீண்டும் வரத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

வாழ்நாளில் ஒருமுறையாவது தென்சீரடி நாதனை தரிசித்துசீரடி சென்ற பலனையும் பக்த்தர்கள் அடையலாம். சீரடியில் இருப்பது போல் பக்தர்களுக்கு வழங்க சிறப்பு ஊதியும் தயாரிக்கப் பட்டு வழங்கபடுகிறது. தமிழகத்தில் பிரம்மாண்ட ஆலயமாக தென் சீரடிஉள்ளது. ஆலயம் செல்ல திருச்சி சத்திரம்பஸ்நிலையம், டோல்கேட், சமயபுரம் அகிய பகுதியில் இருந்து நேரடிபஸ்வசதியும் ஆட்டோ வசதியும் உள்ளது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா
தொலைபேசி எண்: 9994162182

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**




**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# கலைகள் அனைத்தும் ஆண்டவனால் உருவாக்கப்பட்டது

நாம் சந்தேகம் என்ற உணர்வைக் கொள்ளவே கூடாது. இந்த உணர்வு நல்ல மனிதனையும் கெட்ட மனிதனாகக் காட்டி விடும். இது மனிதன் செய்கின்ற தவறு. உலகில் ஒவ்வொரு சமயமும் சிந்தித்தே செயல்படு!

❖❖❖

தயவு செய்து ஒருபோதும் நேர்மையான மனிதர்களை சந்தேகப்பட்டு விடாதே. சிந்தனையின் வழித்துறையே உனக்கு சிந்திக்கின்ற வழியைக் காட்டும்.

❖❖❖

உலகில் ஒரு அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா மிருகங்களும் பறவைகளும் மனித சமுதாயத்தைப் பார்த்து சந்தேகப்படுகின்றன. ஏன்? நாம் ஊறு செய்துவிடுவோம் என்ற கருத்தே அவைகளிடம் உள்ளன. இது தான் ஆண்டவன் உயிர்களின் பரிணாம வளர்ச் சியில் மனித சமுதாயத்திற்கு வைத்த பெரிய சாபம்.

❖❖❖

கலைக்குள் பிறருக்கு மகிழ்ச்சியையும், பொழுதுபோக்கு, வசீகரத்தன்மை இவைகளை கொடுக்க முடியுமென்றால் அது அந்த உயிர் போன்ற கலையினுடைய வெளிப்படும் தன்மையாகும்.

❖❖❖

ஒரு நாட்டினுடைய கௌரவமான வேலை என்னவென்றால்.. உலகிலோ அல்லது நாட்டிலோ உள்ள திறமையுள்ள கலைஞர்களை எடுத்து கையாண்டு கொள்ள வேண்டும், கௌரவிக்க வேண்டும்.



இந்நாட்டிற்கே கலையார்வம் உள்ள நாடு என்று பெயர்.

❖❖❖

உலகநாடுகள் ஒவ்வொன்றும் அங்கங்குள்ள சிறந்த கலைஞர்களுக்கு தனது பெருமையை சேர்க்க வேண்டும். இது அவர்களின் வேலை ஆகும்.

❖❖❖

கடமை உள்ள நாட்டிற்கே கலாச்சார நாடு என்று பெயர்.

❖❖❖

இசை, நடனம், ஓவியம் இவைகள் உலகின் கைகால்களாகும்.

❖❖❖

ஒவ்வொரு ரசாயனக் கூட்டுக்கலவையும் மற்றொரு புதிய இரசாயனக் கூட்டுக்கலவையை கொண்டு முதலில் தயாரித்த இரசாயனக்கலவையை சற்று பலமிழக்கச் செய்யலாம். இதுபோல ஒரு நாட்டின் கலையை மற்றொரு நாட்டின் கலாசாரத்தைப் பரவ விட்டு சிறிது மாற்றி விடலாமே அன்றி கலையில் மாசினை சேர்க்க முடியாது. தயவு செய்து உன்னுடைய நல்ல எண்ணங்களையும், நல்ல உள்நோக்கங்களையும் வேறுவிதமாக கலைத்து விடாதே. கலைகளனைத்தும் ஆண்டவனால் உருவாக்கப்பட்டது.

❖❖❖

உலகிலுள்ள எக்கலைக்கும் உலகமொழிகள் எதுவும் இடைத் தரகு நிலையை செய்வதே இல்லை. அவைகளால் அது

ஆன்மிகமலர்




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


முடியாது. மனிதனின் இதயம் மட்டுமே கலைகளுக்கு வழி செய்து தரும் ஒரு கருவியாகும்.

❖❖❖

கலையும் ஆண்டவனும் ஒன்று, வேறல்ல. கலையின் முன் வணங்கி நில். அதன் வழியாக உலகத்திற்கு கௌரவத்தைக் கொடு.

❖❖❖

பொறுமைத்தன்மை என்றால் என்ன? மனம் உவந்து பிறரது சொல்லையும் உபதேசங்களையும் கேட்பதே அது.

❖❖❖

ஒவ்வொரு தெளிவுள்ள மேதைகளின் சொற்களிலும் ஒரு சிறிது உண்மையேனும் இருக்கக்கூடும். அதை தயவு செய்துபடி. மாமேதைகள் சமுதாயத்தைக் கேட்டுக் கொள்வ தெல்லாம் மனித சமுதாயமே பொறுமைத்தன்மையாய் இரு என்பதே ஆகும்.

❖❖❖

பொறுமைத்தன்மையுடன் உயிர் இருக்கும் வரை இருந்தால் கடைசியில் நீயே முழுவெற்றி பெறுவாய்.

❖❖❖

உலகில் காந்தியடிகள், மஹாவீரர், புத்தர் போன்றோர் பொறுமைத்தன்மையை கடைபிடித்து வாழ்ந்து அதன் வழியே கடைசி வரை இருந்தனர். நீயும் அப்படி இரு.

❖❖❖

இன்றுவரை உலகிற்கு இது வழிகாட்டியாய் இருக்கிறது. எது? அஹிம்சைக் கொள்கை என்ற காந்தி வினோபாவின் கொள்கைகளே. இது உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டு. எடுத்து காட்டிய அவர்களுக்கு நமது வணக்கங்கள்.

❖❖❖

பொறுமைத்தன்மை என்ற தன்மை பழுக்க பழுக்க அத்தன்மையே கருணையாக மாறுகிறது. உலகில் பலரின் முடிவு இதுவாக இருந்திருக்கிறது.

❖❖❖

கருணையுடன் இருப்பது என்பதை மனிதனின் அன்பான தன்மை என்று குறிப்பிடலாம். அதனால் அனைவரிடமும் அன்பாய் இரு. கடவுள் தானாகவே அருகில் வருவான்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## பரத்வாஜ முனிவர், குருபகவானின் சாபம் போக்கிய

# பாடி திருவலிதாயம்

அருள்மிகு ஜகதாம்பாள் அம்மன் உடனுறை வலிதாய நாதர் திருக்கோயில், பாரத்வாஜ மஹரிஷியால் இத்தல இறைவன் வழிபடப்பட்டுள்ளதால் இத்தலம் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவர்கள் வழிபட வேண்டிய தலமாக விளங்குகிறது.

பரத்வாஜ முனிவர், வலியனாக (கருங்குருவியாக) சாபம் பெற்றார்; அச்சாபம் நீங்க இத்தலத்து வந்து தீர்த்தம் உண்டாக்கி, இறைவனைப் பூசித்துச் சாபம் நீங்கப் பெற்றார் என்பது தல வரலாறு.

தேவாரப்பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இது 21வது தலம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 254 வது தேவாரத்தலம் ஆகும்.

இறைவன் பெயர்: வலிதாய நாதர், வல்லீஸ்வரர்.

**வழிபட்டோர்:**

பரத்வாஜர், இராமர், ஆஞ்சநேயர், சூரியன், சந்திரன், இந்திரன், வலியன் (கருங்குருவி) முதலானோர்.

**தேவாரப் பாடல்கள்:** சம்பந்தர்

பத்தரோடுபல ரும்பொலியம்மலர்
அங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு
தேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை
கின்றவலிதாயம்
சித்தம்வைத்தவடி யாரவர்மேலடை
யாமற்றிடர்நோயே.

**தலவரலாறு**

தற்போது சென்னைக்கு அருகில் உள்ள 'பாடி' என்னும் இடமே 'திருவலிதாயம்' என்னும் தலம் ஆகும். பாரத்வாஜ மஹரிஷியால் இத்தல இறைவன் வழிபடப்பட்டுள்ளதால் இத்தலம் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவர்கள் வழிபட வேண்டிய தலமாக விளங்குகிறது. சென்னையின் ஒரு பகுதியான பாடி என்ற இடத்தில் அமைந்துள்ள வல்லீஸ்வரர் ஆலயம் தேவார காலத்தில் திருவலிதாயம் என்று வழங்கப்பட்டது.

சென்னை ஆவடி சாலையில் பாடி டிவிஸ் லூகாஸ் பேருந்து நிறத்தத்தில்


www.aanmeegamalar.com






இறங்கி எதிரே உள்ள கிளைப் பாதையில் சென்று இக்கோவிலை அடையலாம். பாரத்துவாஜ முனிவர் கருங்குருவி (வலியன்) யாக வந்து இத்தலத்தில் இறைவனை வழிபட்டதால் இத்தலம் திருவலிதாயம் என்றும் இறைவன் வலிதாய நாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

3 நிலைகளை உடைய கிழக்கு வாசல் கோபுரமே பிரதான கோபுரம். கோபுர வாசல் வழியாக உள்ளே நுழைந்ததும் ஒரு விசாலமான வெளிப் பிரகாரம் உள்ளது. அதில் கொடிமரம், நந்தி சுவாமி சந்நிதிக்கு நேர் எதிரே உள்ளது. வலது புறத்தில் குரு பகவானுக்கு தனி சந்நிதி இருக்கிறது. குரு பரிகார தலங்களாக சொல்லப்படும் தலங்களில் திருவலிதாயமும் ஒன்றாகும். குரு பகவான் தன்னைப் பற்றி இருந்த தோஷம் நீங்க இத்தலத்தில் தவமிருந்தே சிவனருள் பெற்றார் என்பதால் இத்தலத்தில் குரு பகவானுக்கு தனி சிறப்புண்டு.

வெளிப்பிரகாரத்தில் இருந்து உள்மண்டபத்தில் நுழைந்தவுடன் மூலவர் திருவலிதாயநாதர் சந்நிதி கிழக்குப் நோக்கி அமைந்திருக்கிறது. சுவாமி சந்நிதி கருவறை கஜப்பிரஷ்ட விமான







அமைப்புடையது. உள் பிரகாரத்தின் வலது புறம் தெற்கு நோக்கிய அம்பாள் தாயம்மை சந்நிதி இருக்கிறது. அம்பாள் சந்நிதிக்கு நேர் எதிரே தெற்கு வெளிப் பிரகாரத்தில் சிம்ம வாகனம் அம்பாளை நோக்கியவாறு உள்ளது. ஈசன் கருவறையின் உள்ளேயும் ஒரு அம்பாள் திருவுருவம் உள்ளது. அம்பாள் திருவுருவம் ஒரு காலத்தில் பின்னப்பட, புதிய மூர்த்தம் செய்து அதை வெளியே தெற்கு நோக்கி இருக்குமாறு பிரதிஷ்டை செய்து, பின்னமான மூர்த்தத்தை ஈசன் கருவறைக்கு உள்ளே வைத்து விட்டதாக சொல்லப்படுகிறது.

பரத்வாஜ முனிவர், வலியனாக (கருங்குருவியாக) சாபம் பெற்றார்; அச்சாபம் நீங்க இத்தலத்து வந்து தீர்த்தம் உண்டாக்கி, இறைவனைப் பூசித்துச் சாபம் நீங்கப் பெற்றார் என்பது தல வரலாறு. பிரம்மாவுக்கு கமலை, வல்லி என இரு பெண்கள் தோன்றினர் என்றும் அவர்களை விநாயகர் மணந்து கொண்டார் என்றும் வரலாறு ஒன்று சொல்லப்படுகிறது.

உள் பிரகாரத்தில் சூரியன், 4 கரங்களுடன் உள்ள பாலசுப்ரமனியர், விநாயகர், தட்சினாமூர்த்தி, மஹாவிஷ்னு, பிரம்மா, துர்க்கை ஆகியோரின் உருவச்சிலைகள் இருக்கின்றன. ஈசன் கருவறை பின்புற கோஷ்டத்தில் அநேக தலங்களில் லிங்கோத்பவர் தான் இருப்பார். ஆனால் இங்கு மகாவிஷ்ணு காணப்படுகிறார். மகாவிஷ்ணு, அவரின் அம்சமான பரசுராமர், ராமர் ஆகியோர் சிவபெருமானை வழிபட்ட தலங்களில் எல்லாம் லிங்கோத்பவர் இருக்கும் இடத்தில் மகாவிஷ்ணு இருப்பார். அவ்வகையில் இத்தல இறைவனை இராமர் வழிபட்டுள்ளார். மேலும் சோமஸ்கந்தர், வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகன், அனுமன் பூஜித்த அனுமலிங்கம், இந்திரன் சாபம் நீக்கிய மீனாட்சி சுந்தரேஸ்வரர் சந்நிதிகள் உள்ளன. பாரத்வாஜ முனிவரால் பிரதிஷ்டை செய்து வணங்கப்பட்ட ஒரு சிவலிங்கமும் உள் பிரகாரத்தில் உள்ளது. இத்தலத்தில் முருகப்பெருமான் சுப்பிரமணியராக ஒரு திருமுகத்துடனும் 4 திருக்கரங்களுடனும் தனது தேவியர் இருவருடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். திருப்புகழில் இத்தலத்து முருகன் மீது ஒரு பாடல் உள்ளது. கோவிலில் உள்ள தூண்களில் நடராஜர், முருகர், கோதண்டராமர், மச்சாவதாரமூர்த்தி, கூர்மாவதாரமூர்த்தி ஆகியோரின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

– சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்
919003296221 easanaithedi.in



சிவத்திரு.குமரேசன்

www.aanmeegamalar.com




# சனிக்கிழமைகளும் வாங்கக்கூடாத பொருட்களும்

வாரத்தின் ஏழுநாட்களில் ஒருசில நாட்கள் ஒருசில கிரகத்திற்கு உரிய நாட்களாக கணக்கிடப்பட்டாலும், சனிக்கிழமை என்பது மிக முக்கிய நாளாக போற்றப்படுகிறது.

நவகிரகங்களில் மற்ற கிரகங்களை காட்டிலும் சனிபகவான் என்றால் அனைவரும் பயப்படுவார்கள்.

அதுமட்டுமின்றி மற்ற கிரகப்பெயர்ச்சி போல் இல்லாமல் நீண்ட காலம் ஒரே ராசியில் அமர்ந்து சுப மற்றும் அசுப பலன்களை தரக்கூடியவராக சனி இருப்பதால் சனிபகவானின் பெயர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது என ஜோதிடத்தில் கூறப்படுகிறது.

அதன்படி நிறைய விஷயங்கள் இந்த கிழமைகளில், இந்த நாட்களில் செய்ய வேண்டும். இந்த சமயத்தில் செய்யக்கூடாது என இருக்கிறது. அந்த வகையில் சனிக்கிழமையன்று எந்தெந்த பொருட்களையெல்லாம் வாங்கக்கூடாது என்பதை பற்றி பார்க்கலாம்.

### சனிக்கிழமை வாங்கக்கூடாத பொருட்கள்?

சனிக்கிழமையன்று உப்பு வாங்கவே கூடாது... அவ்வாறு வாங்கினால் வியாபாரத்தில் நஷ்டம், பண விரயம் உண்டாகும். மேலும் அடிக்கடி நோய்வாய்ப்படவும் நேரிடும்.

வீடு பெருக்கப் பயன்படும் துடைப்பத்தை சனிக்கிழமை வாங்குவது நல்லதல்ல.

கத்திரிக்கோலை சனிக்கிழமையன்று வாங்குவது உகந்ததல்ல. இதனால் மோசமான சூழ்நிலையில் இருப்பவர்கள் இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

அரிசி மாவு, கோதுமை மாவு போன்ற மாவுப்பொருட்களையும் சனிக்கிழமைகளில் வாங்கக்கூடாது. இவைகள் மோசமான உடல் நிலையை குறிப்பதாகும்.

எள்ளை சனிக்கிழமையில் வாங்கக்கூடாது. இதனால் முடிக்க வேண்டிய காரியம் முடியாமல் தள்ளிப் போகும் அல்லது தடைபடும்.

இரும்பு சம்பந்தப்பட்ட பொருட்களை சனிக்கிழமை வாங்கக்கூடாது. ஏனென்றால் இரும்பு பொருட்கள் சனிபகவானுக்கு ஆகாததால் அன்று வாங்கினால் துரதிர்ஷ்டத்தை உண்டாக்கும். அதேசமயம் இரும்பு சம்பந்தப்பட்ட பொருட்களை சனிக்கிழமையன்று தானமாக கொடுத்தால் மிகவும் நல்லது.

சனிக்கிழமையன்று எண்ணெய் வாங்கக்கூடாது. அவ்வாறு வாங்கினால் அடிக்கடி உடல் நலக்குறைவு உண்டாகும். ஆனால் எண்ணெயை தானமாக கொடுக்கலாம். அதுவும் கடுகு எண்ணெயில் செய்த அல்வா, நல்லெண்ணெயை தானம் செய்தால் மிகவும் சிறந்ததாகும்.




# வாழ்வில் ஏற்படும் சிக்கலும் அதை போக்கும் தீர்வுகளும்

**கேள்வி:** வீட்டில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏதேனும் உடல் நல கோளாறுகள் வந்து கொண்டே இருந்தால் என்ன செய்வது?

**பதில்:** கோவிலிலோ அல்லது ஆன்மீக மையங்களிலோ பகல் வேலையில் முழு மஞ்சள் பரங்கிக்காய் தானம் செய்ய குடும்பம் உடல் கோளாறுகளிலிருந்து விடுபடும். இதன் சக்தியை மூன்றே நாட்களில் உணரலாம்.

**கேள்வி:** நல்ல சம்பாத்தியம் இருந்தும் பணம் வீண் விரயமாகி கொண்டே இருந்தால் என்ன செய்வது?

**பதில்:** தினமும் காலை வேளையில் பறவைகளுக்கு இனிப்பு பிஸ்கட்கள் வழங்க வீண் விரயம் கட்டுப்படும்.

**கேள்வி:** காரணமில்லாத பய உணர்வு இருந்து கொண்டே இருந்தால் என்ன செய்வது?

**பதில்:** வலது கையில் ஸ்டைன்லெஸ் ஸ்டீல் வளையம் ஒன்று மாட்டி வர பய உணர்ச்சிகள் குறையும்.

**கேள்வி:** மன வருத்தம், என்னவென்றே தெரியாத குழப்பம், மன அழுத்தம், சோர்வு போன்றவை நாள் முழுதும் இருப்பின் என்ன செய்வது?

**பதில்:** இரவு படுக்கும் பொழுது தலைக்கு அருகில் ஒரு டம்ப்ளர் தண்ணீர் வைத்து கொண்டு படுக்கவும்.காலையில் சோர்வு, மன அழுத்தம் நீங்கி இருப்பதை நீங்களே உணரலாம்.நீரை மரத்திலோ வெளியிலோ ஊற்றி விட வேண்டும். அதை குடிக்க கூடாது.

**கேள்வி:** தற்கொலை எண்ணங்கள் மேலும் வாழ பிடிக்காதது போன்ற உணர்வுகள் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தால் என்ன செய்வது?

**பதில்:** வெள்ளி கம்பியால் மூக்கில் சிறு துளை போட அந்த எண்ணங்கள் மாற ஆரம்பிக்கும். ஆண்களுக்கும் செய்யலாம். மூக்குத்தி அணிய வேண்டியதில்லை.




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









ரமணருக்கு

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

# என பெயர் சூட்டியவர்



கணபதி முனிவர்

திருவண்ணாமலையே கதியென கிடந்து மோட்சத்தை அடைந்த பல்வேறு முனிவர்கள் மற்றும் ஞானிகளில் ஒரு சிலரைப் பற்றி கேள்விப்பட்டிருப்போம், பலரை யார் என்றே தெரியாமல் அவர்களைக் கடந்திருப்போம், அந்தவகை யில், ரமண மகரிஷிக்கு பகவான் என்ற திருநாமத்தை சூட்டிய மகானைப் பற்றி ஒருசிலரைத் தவிர மற்றவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

கணபதி முனிவர், மஹா பண்டிதர் என்று புகழ் படைத்தவர், பெரிய கவி, மஹா தபஸ்வி.

இவர் பலஆண்டுகள் கடுந்தவம் புரிந்தும் ஏதோ ஒரு கருதிய பலன் கைக்கூடாது மனம் வருந்தி நின்றார்.

1907~ஆம் ஆண்டு ஒரு நாள் திருவண்ணாமலைச் சுற்று வழியில் ஒரு மண்டபத்தில் தியானித்திருந்த போது ஏதோவோர் தூண்டுதலால் இருக்கையை விட்டு எழுந்து கோவிலை நோக்கி நடந்தார்.

வழியிலே அருணாசலேசுவரர் ஊர்வலம் வருமிடத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

மறு நாள் மத்தியானம் மலை மீதுள்ள பிராமண சுவாமிகளைச் சரணடையும்

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

நோக்கத்துடன் உக்கிரமான வெயிலையும் பொருட்படுத்தாது உடனே மலை மீதேறினார்.

அதிர்ஷ்டவசமாக அன்று விரூபாக்ஷ குகை யின் முன்தாழ்வாரத்தில் ரமணர் தனியே அமர்ந்திருந்தார்.

கணபதி முனிவர் சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து தம் இரு கரங்களாலும் சுவாமிகளின் அடிகளைப் பற்றிக் கொண்டு,

"கற்க வேண்டிய யாவையும் கற்றேன்;

வேதாந்த சாஸ்திரங்களையும் பயின்றேன்; மனங்கொண்ட மட்டும் மந்திரங்களையும் ஜபித்தேன். ஆனாலும் தபஸ் என்பது யாதெனத் தெரியவில்லை. ஐயனே,உனது அடியினைச் சரணடந்தேன்"என்று இறைஞ்சினார்.

சுவாமிகள் கணபதி முனிவரை சுமார் நாற்பது நிமிடம் கருணையுடன் நிச்சலமாகக் தனது பார்வையை கணபதி முனிவர் மேல் செலுத்தினர்.

பின்பு இவ்வாறு கூறினார்.

"நான், நான்" என்பது எங்கேயிருந்து புறப்படுகிறதோ அதைக் கூர்ந்துகவனித் தால் மனம் அங்கே லீன மாகும், அதுவே தபஸ்.

"ஒருமந்திரத்தைஜபம் பண் ணுங்கால், மந்திரத் துவனி எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால் மனம் அங்கே லீனமாகிறது. அதுதான் தபஸ்."

இவ்வருள் வாக் கும் இத்திவ்ய உ ப தே ச மொழிகளும் கணபதி முனிவரின் ஐயங்கள் யாவற்றையும் தீர்த்துவிட்டன.குகையிலேயே அன்று இரவு வரை அவர் தங்கினார்.

பக்கத்தில் உள்ள வரிடமிருந்து சுவாமி களின் பெயரைக் கேட்டார், பெயரைத் தெரிந்து கொண்டதும், இவர் ரமணர் கிடையாது, பகவான் ஸ்ரீரமணமஹரிஷிகள் என்பதே சுவாமிக்குப் பொருத்தமான பெயர் என்று வெளியிட்டார்.

"மருவிலாக் காட்சிப் பெரியனை இனிமேல், மஹரிஷி என்றே வணங்கிப் பணிக" என்று பாடினார்.

இனிமேல் பகவான் என்றே பக்தர்கள் யாவரும் மஹரிஷிகளை அழைக்க வேண்டும் என்று கூறினர்.

அன்று முதல் ரமணரை, பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி என்று அவரது சீடர்கள் அழைக்கத் துவங்கினர்.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# சகட தோஷம்

சகட அல்லது சகடை என்றால் சக்கரம் என்று அர்த்தம். சக்கரம் எப்படி கீழிருந்து மேலாகவும், மேலிருந்து கீழாகவும் செல்கிறதோ அது போல் இந்த சகட தோஷத்தால் பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையும் ஏற்ற இறக்கமாகச் செல்லும் என்பது சகடை அல்லது சகட தோஷத்தின் அர்த்தமாகும். இந்த சகட தோஷம் உள்ளவர்கள் வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் இரண்டற கலந்து இருக்கும். இவர்களின் வாழ்க்கையில் நிரந்தர இன்பமும் இல்லை, நிரந்திர துன்பமும் இல்லை.

சகட தோஷத்தை எவ்வாறு அறிவது




ஒருவரின் ஜாதகத்தில் 6ம் இடத்தில் சந்திரன் இருந்தாலும், குரு நின்ற ராசிக்கு 6, 8, 12 ஆகிய ராசிகளில் சந்திரன் இருந்தாலும் அது சகட தோஷம் அல்லது சகடை தோஷம் ஆகும்.

சகட தோஷத்தால் உண்டாகும் துன்பங்கள்

சகட தோஷம் உள்ளவர்கள் பணம் கையில் தங்காது மற்றும் படிப்பிற்கேற்ற தகுந்த வேலை கிடைக்க மிகவும் சிரமப்படுவார்கள். பதவிகள் கிடைத்தாலும் அது நிரந்திரமாக இருக்காது. எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் எளிதில் வெற்றி கிடைக்காது. வெற்றி கிடைக்க நிறைய போராட வேண்டி இருக்கும்.

### நிலையான வாழ்க்கை அமையாது

இந்த தோஷ அமையப் பெற்றவர்கள் ஒரே இடத் தில் நிலையாக இருந்து வேலை பார்க்க முடியாது. வேறு வேறு இடத்திற்கு மாறிக் கொண்டே இருப்பார்கள் அல்லது அலைந்து கொண்டே இருப்பார்கள். வாழ்க்கை வண்டிச்சக்கரம் போல பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருந்து கொண்டே இருக்கும்.

### சகட தோஷ பரிகாரங்கள்

சகட தோஷம் உள்ளவர்கள் காலை எழுந்தவுடன் ‘ஓம் நமசிவாய நம” என்று 108 முறை வாழ்நாள் முழுவதும் சொல்லி வர வேண்டும். அப்படி சொல்லி வந்தால் கெடு பலன்கள் ஏற்படுவது குறையும். பச்சரிசி தவிடு, அகத்திகீரையை பசு மாட்டிற்கு ஒன்பது நாட்களுக்கு தொடர்ந்து கொடுத்து அந்தப் பசுவை வணங்கி வந்தால் அவர் களுக்கு சகட தோஷம் விலகி வாழ்வில் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும்.

மேலும் சகட தோஷம் உள்ளவர்கள் வருடந்தோறும் நடைபெறும் கோவில் தேரோட்டத்தை கண்டால் சகட தோஷம் நீங்கி வாழ்வில் வளம் பெறுவர். இந்த தோஷம் உள்ளவர்கள் யானை முடியை மோதிரமாக செய்து விர லில் அணிந்து வரலாம்.

எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.
செல்: 9750333265







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதா சமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்



# ஆன்மீக வழியில் அமைதி

நமது அறிவுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டது ஆத்மா ஆகும். ஆத்மா என்பது உயிரா, உடலா, உணர்வா என்று சிந்தித்துப் பார்த்தால், ஆத்மா என்பது உடல் என்று கூற முடியாது. உடல் முதுமையின் காரணமாகவோ நோயின் காரணமாகவோ இந்த மனித உடல் அழியக்கூடியது. ஆத்மாவிற்கு அழிவில்லை என்று ஆன்மீக ஞானிகள், சித்தர்கள் கூறியுள்ளனர். ஆத்மா என்பது அறிவு என்றும் கூற முடியாது. மனிதனுக்கு மனிதன் அறிவு நிலையில் வேறுபாடுகள் குறைபாடுகள் போன்றவை காணப்படுகிறது.

ஆனால் ஆத்மாவிற்கு வளர்ச்சி, வளர்ச்சியின்மை வேறுபாடுகள் மாறுபாடுகள் போன்ற நிலைகள் இருப்பது இல்லை. ஆத்மா என்பது நம்மிடையே காணும் உணர்வா? என்று சிந்தித்துப் பார்த்தால், உணர்வு என்றும் கூற முடியாது. ஏன் என்றால் மனித உணர்வுகள் மனிதனுக்கு மனிதன் பலவிதங்களில் உணர்வுகள் மாறுபட்டு வெளிப்படுகிறது. ‘உடல் அழிவதைப்போல் ஆத்மா அழிவது இல்லை. குடம் உடையும்போது குடத்தில் இருக்கும் காற்றும் ஆகாயமும் உடையாமல் இருப்பது போன்றது’ என்று ஆத்மா பற்றி வடலூர் வள்ளல் பெருமான் கூறியுள்ளார்.

ஒவ்வொரு மனிதனுடைய உணர்வுகளும் கணம்தோறும் அடிக்கடி சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறுதலுக்கு உட்பட்டது. ஆத்மா என்பது உயிரா என்று சிந்தித்துப் பார்த்தால், உலகில் காணப்படும் உயிரினங்கள், அனைத்தும் அழியக்கூடியது. எனவே ஆத்மா என்பது உயிராகவோ, உடலாகவோ, உணர்வாகவோ, அறிவாகவோ, எண்ணங்களாகவோ இருக்க முடியாது. ஆத்மா என்பது அழிவில்லாதது, ஆத்மாவுக்கு உயர்வு தாழ்வு போன்ற மாறுதல்கள் இல்லாதது. ஆத்மாவுக்கு பிறப்பு, இறப்பு, இளமை, முதுமை, நோய்நொடிகள், வண்ணங்கள், குணங்கள் போன்றவை இல்லாதவை ஆகும்.

ஆத்மா என்பது நமது ஸ்தூல, சூக்ம, காரண சரீரங்களுக்கு அப்பாற்பட்டது. ஆத்மாவை நமது கண்களால் காணமுடியாது. ஆன்மீக குருவின் மூலம் பயிற்சியை மேற்கொண்டால் நாம் ஆன்மீக வழியில் சென்று ஆத்மாவை உணர முடியும். ஆத்மாவை உணர்ந்த அறிந்த ஆன்மீக ஞானிகள் காட்டிய வழியில் தியானம், தவம், மன ஒருமைப்பாடு, மனப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம், நாம் ஆத்மாவை உணர முடியும். ஸ்தூல சரீரம் என்பது நாம் காணும் உடல் ஆகும். சூக்ம உடல் நமது கண்ணுக்குத் தெரியாத உடலாகும். மனதுக்குக் காரணமாக இருப்பது, ஐந்து கோஷங்களுக்கு வேறுபட்டுக் காணப்படுவது காரண உடல் ஆகும்.

43

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் மூன்று விதமான அவஸ்தைகளில் அவஸ்தைப்படுகிறான். அவை விழிப்பு நிலை, கனவு நிலை மற்றும் ஆழ்ந்த நிலை ஆகும். இந்த மூன்று நிலைகளுக்கும் சாட்சியாக இருப்பது கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியாதது புரிந்து கொள்ள முடியாதது இந்த ஆத்மாஆகும்.

சத் என்றால் நித்தியம். அதாவது அழிவில்லாதது. சித் என்றால் அறிவு ஸ்ரூபம். ஆனந்தம் என்றால் மகிழ்ச்சியுடன் இருப்பது ஆகும். சத்சித்யானந்தம் என்பது ஸ்தூல, சூக்ம, காரண ஆகிய மூன்று சரீரங்களுக்கு வேறுபட்டு இருப்பதாகும். விழிப்புநிலை, கனவுநிலை, கனவுநிலையற்ற ஆழ்நிலை என மூன்றுவிதமான மனித அவஸ்தைகளுக்கும் வேறுபட்டும் மாறுபட்டும் ஆனந்த சொரூபமாக எது இருக்கிறதோ அதுவே ஆத்மா எனப்படும்.



ஸ்தூல சரீரம் என்பது நமது கண்களுக்கு தெரியும் உடலாகும். எது அழியக்கூடிய தன்மையுடையதோ, நமது துன்ப இன்பங்களை அனுபவவிப்பதற்கு இருப்பிடமாக இருப்பது இந்த ஸ்தூல உடலாகும். சுகம், துக்கம் கோபம், சாந்தம் போன்றவைகளை அனுபவவிப்பதற்கு இருப்பிடமாக இருப்பது இந்த ஸ்தூல உடல் ஆகும். பலவிதமான அனுபவங்களைக் கொண்டது, நம் கண்ணுக்குத் தெரியும் இந்த ஸ்தூல சரீரம் ஆகும். அதாவது பலவிதமான இன்ப துன்பங்களை அனுபவவிக்கக்கூடியது நாம் காணும் ஸ்தூல உடலாகும். இந்த ஸ்தூல உடல் என்பது நாம் குடியிருக்கும் வீட்டைப் போன்றது..

இந்த உலகம் ஐந்து பூதங்களால் ஆனது. நிலம், நீர், காற்று, ஆகாயம், அக்னி போன்ற ஐந்து பூதங்களால் ஆனது. அதேபோல் ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் நாம் காணும் இந்த உடலும் ஐந்து பூதங்களை தன்னகத்தே கொண்டது. இந்த உடல் பஞ்ச பூதங்களில் நிலம், உடலில் ஓடும் இரத்தம் நீர், நாசி மூலம் நாம் வெளிவிடும் மூச்சு, காற்றாகவும், உடலில் இருக்கும் வெப்பம் அக்னியாகவும் இருக்கிறது. நமது உடல் ஐந்து பூதங்களால் ஆனது. மனிதன் மரணம் அடையும்போது இந்த உடல், இரத்தம், காற்று, வெப்பம் போன்ற ஐந்து பூதங்களும் அழிந்து மண்ணுக்குள் தீயில் ஐக்கியமாகி விடுகிறது.

சூக்ம சரீரம் என்பது நம் கண்களுக்குத் தெரியாத மனம் என்று கூறலாம். மனம் என்பது கண்ணுக்குத் தெரியாத குடியிருக்கும் இந்த சூக்ம உடல் ஆகும். மனிதனுடைய மனம் இந்த சூக்ம சரீரத்தின் மூலமாகத்தான் அனுபவிக்கிறது. பஞ்சபூதங்கள் அனுபவிக்கக் கூடிய இன்ப துன்பங்கள் சூக்ம நிலையில் இருந்து ஸ்தூல நிலைக்கு ஆனது என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு ஓவியன் ஓவியத்தை தன்னோட மனதில் முதலில் உருவாக்கி, அதன் பிறகுதான் அந்த ஓவியத்தை வரைந்து ஓவியத்திற்கு உயிர் கொடுக்கிறான். அதாவது சூக்மமாக (கற்பனையில்) ஓவியன் மனதில் தோன்றிய ஓவியத்தை ஓவியன் வரைந்து, அந்த ஓவியத்தை நம்முடைய கண்களுக்கு உயிரோட்டமாகத் தெரியும் ஓவியமாக வரைகின்றான்.

அதேபோல் சூக்ம உடல், ஸ்தூல உடலாக மாறி விடுகிறது. ஸ்தூல நிலை இல்லாத நிலை சூக்ம நிலையாகும். இந்த சரீரம் நீர், நெருப்பு, காற்று போன்ற ஐந்து பூதங்களால் உருவாக்கப்பட்டது. நாம் உண்ணும் உணவு, அருந்தும் நீர் உடலை

• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

வளர்க்கிறது. அதாவது நாம் உண்ணும் உணவானது, சூக்குமமாக இரசாயன மாற்றமாக மாறி, அதன் மூலம் நமது ஸ்தூல உடலை வளர்ச்சியடையச் செய்கிறது. மனித உடல்கள் மட்டுமல்ல உலகில் காணும் விலங்குகள், பறவைகள் மரம் செடிகொடிகள் போன்றவை அனைத்தும் இந்நிலையில்தான் செயல்படுகிறது. அவைகளும் பஞ்சபூதங்களால் ஆனது.



எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்

மனிதர்கள் பலவிதமான உடல்களை அவர்களையும் அறியாமல் விரும்பியும் விருப்பமில்லாமல் பெற்றுள்ளார்கள். குழந்தை, இளமை, முதுமை, பிணி, மூப்பு மரணம் என்ற நிலைகளில் இந்த மனித உடல், மாறிக்கொண்டே இருக்கிறது. முடிவில் ஸ்தூல உடல் மரணத்தை தழுவி இறந்து விடுகிறது. உலகில் காணும் மனிதர்களில் உடல் ஊனமுற்றவர்களைக் காணலாம். மனிதனுக்கு கண்கள் தெரியவில்லையெனில் குருடன், கால்கள் நடக்க முடியாமல் இருந்தால் அவன் நொண்டி, காதுகள் கேட்கும் சக்தியை இழந்து விட்டால் செவிடன், பேசும் சக்தியை இழந்து விட்டால் ஊமை என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனும் முன்ஜென்மத்தில் அவன் செய்த கர்மபலன்களின் மூலம் மனிதன் ஸ்தூல உடலைப் பெறுகிறான். மனிதன் தான் செய்த தர்ம அதர்ம செயல்களினால் ஸ்தூல உடலை பெறுகிறான். எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் தனது வருமானத்தில் சிக்கனப்படுத்தி வீடு கட்டுதல் போன்றது இந்த மனித உடலைப் பெறுவது ஆகும். உலகில் தர்மம் போன்ற நற்செயல்களைச் செய்தால் அவன் முழுமையான குறைபாடுகள் எதுவுமின்றி, நல்ல முழுமையான உடலைப் பெறுகிறான். உடலில் இருக்கும் ஜீவாத்மா செய்த கர்மபலன்களினால் நாம் பெறக்கூடியது இந்த மனித உடலாகும்.

எடுத்துக்காட்டாக தாய்தந்தையார் ஈட்டிய சொத்துக்களை எல்லாம் அவன் பெற்ற மகனே அழிக்கிறான் என்றால், அவன் தாய் தந்தை செய்த கர்மபலன்கள்தான் அதற்கு காரணம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கர்ம பலன்களின் அடிப்படையில் அமைகிறது என்றால், மனித உடலில் குடியிருக்கும் ஜீவாத்மா செய்த கர்ம பலன்களின் அடிப்படையில், இந்த மனித ஜென்மம் கிடைக்கிறது. அதனால்தான் மனிதப்பிறவியைக் குறிப்பிடும்போது தமிழ் மூதாட்டி ஔவையார் ‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதனினும் கூன் குருடு நீங்கிப் பிறத்தல் அரிது’. என்று கூறியிருப்பது கர்மபலன் அடிப்படையில் மனித ஜென்மம் அமையும் என்பதை அவர் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

உலகத்தில் காணப்படும் உயிர்கள் அனைத்தும் மகிழும்படி நன்மை தரக்கூடிய செயல்களை நாம் செய்வது புண்ணிய கர்மங்கள் ஆகும். அதற்கு மாறாக உலகில் காணப்படும் உயிர்கள் துன்பம் அடையும்படியாக தீமைகள் தரக்கூடிய செயல்களைச் செய்வது பாவ கர்மங்கள் ஆகும். நாம் செய்யக்கூடிய புண்ணிய கர்மங்கள் மறுபிறவியில் மனிதனாக பிறக்க வைக்கும். நாம் அறிந்தும் அறியாமல் செய்யக்கூடிய செயல்கள் பாவகர்மங்கள். மறுபிறவியில் மனிதப்பிறவி அல்லாத உயிரினங்களான மரம், செடிகொடிகள், பறவைகள், மிருகங்கள் போன்றவையாக பிறப்பெடுப்பார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்துக்கும் முக்கியக் காரணம் மற்றவர்கள் மீது வீணாகக் குற்றம் சாட்டுவது ஆகும். எனவே துன்பங்களில் இருந்து விடுதலை பெற வேண்டுமானால் பிறர் மீது வீண் பலி சுமத்துவதை நிறுத்த வேண்டும். அவ்வாறு குற்றம் சாட்டாமல், நாம் அறிந்தும் அறியாமல் செய்த கர்ம பலன்கள்தான் நாம் துன்பம் அடைவதற்குக் காரணம் என்பதை நன்கு உணர்ந்து செயல்புரிய வேண்டும். இதனைத்தான் புத்த பகவான் ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று போதித்துள்ளார். துன்பத்துக்குக் காரணம் ஆசை என்னும் கர்மம்தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் உணர்ந்து செயல்புரியும்போது நாம் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும். அப்படிப்பட்ட புண்ணிய பாவகர்ம பலன்கள் பற்றி விளக்கமாகக் கூறி நம்மையெல்லாம் பந்தபாசங்களிலிருந்து கரையேற்றுவது ஆன்மீகம்தான். ஆன்மீக வழியில்தான் நாம் தேடும் அமைதியைக் காணமுடியும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

www.aanmeegamalar.com

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நமது இதழ் வளர்ச்சிக்கு உதவ விருப்பமுள்ள வாசக அன்பர்கள்

## விருப்ப சந்தா செலுத்தலாம்

**எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.**

விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள் UPI & வங்கி எண் வாயிலாகவும் சந்தா செலுத்தலாம்




**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)